# சங்கமயுகம்

மலர்: 28 பிப்ரவரி-மார்ச் 2015 இதழ்: 6


இருமாத இதழ்: ரூ. 8.00




**இறைவனின் செய்தி - உங்களுக்காக...**

எந்த ஒரு இறைவனை அடைவதற்காக இவ்வளவு காலம் பக்தி, ஜபம், தவம், தீர்த்த யாத்திரை, விரதம், உபவாசம் முதலியவைகளை செய்து வந்தீர்களோ அந்த இறைவன் இப்பொழுது பாரத பூமியில் அவதரித்துள்ளார். நீங்களும் அவரை மானசீகமாக சந்திக்க இயலும். இறைவனுடைய சத்திய சொரூபத்தை அறிந்து, அவர் மூலமாக மட்டுமே பெறக்கூடிய ஞானத்தைப் புரிந்து அனைத்து ஆசிகளையும் அடைவதற்கு அருகாமையில் உள்ள பிரம்மா குமாரிகள் சேவைநிலையத்தை அணுகவும்.

இறைவன் இப்பூமியில் அவதரித்துள்ளார், சகோதர ஆத்மாக்களாகிய உங்களுக்கு இச்செய்தியை அளிக்க வேண்டியது எங்களுடைய கடமையாக கருதுகிறோம் — பிரம்மா குமாரிகள்





திருவணந்தபுரம்: குட்டநாடு தேவி ஆலயத்தில் 12 ஜோதிர்லிங்க தரிசன நிகழ்ச்சியினை துவக்கி வைப்பவர்கள்: ஸ்ரீ செல்வராஜ், MLA, சுவாமி புத்திதீர்த்தாஜி, மாவட்ட பஞ்சாயத்து தலைவர் ஸ்ரீ ரூப்சுப் டேனியல், பி.கு. மினி மற்றும் நகர பிரமுகர்கள்



சென்னை: இராயப்பேட்டையில் சிவஜெயந்தி விழாவினை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த காசி விஸ்வநாத லிங்க தரிசன நிகழ்ச்சியில் கலந்து கொண்ட பிரமுகர்களுடன் பி.கு. இரஞ்சனி



திருவண்ணாமலை: கொலம்பியாவிருந்து ஆன்மீகத்தைப் பற்றி ஆராய்ச்சிக்கான கல்வியை பயில விஜயம் செய்த மாணவர்களுக்கு தியான பயிற்சி அளித்த சகோதரி உமா.



கடலூர்: காசி விஷ்வநாத லிங்க தரிசனத்தினை திறந்து வைப்பவர்கள்: பஞ்சாய்த்து தலைவர் மற்றும் பெற்றோர் ஆசிரியர் சங்க தலைவர் திரு. ஜெகநாதன் மற்றும் பி.கு. பரசுராமன்



சென்னை: சமீபத்தில் புதியதாக கீதாபாடசாலையை திறந்துவைத்து இறை நினைவு பரிசினை வழங்குகின்றார் பி.கு. பீனா



சென்னை: இரத்தன்பஜார் சார்பில் காவாங்கரையில் நடைபெற்ற தேவிகள் கண்காட்சி துவக்க விழாவில் நகர முக்கியஸ்தர்களுடன் பி.கு. பீனா



சென்னை: இரத்தன்பஜார் சார்பில் நடைபெற்ற தேவிகள் கண்காட்சியில் தத்ரூப கைலாச மலை தரிசன காட்சி

R.No. : 49463/87

தலையங்கம்

# சிவபரமாத்மா

## ஆத்ம தர்மத்தை ஸ்தாபனை செய்வதற்காக அவதாரம் செய்திருக்கின்றார்

இப்பிரபஞ்சத்தின் அற்புதங்களை யெல்லாம் கண்டு அதிசயிக்கும் நாம், நிச்சயிக்கப்பட்டும், தொடர்ந்து நடந்து கொண்டுமிருக்கின்ற உலக நாடக வரலாறைப் பற்றி அறியும்போது பிரமிப்பில் ஆழ்ந்து விடுகிறோம். ஆகவேதான், எவ்வளவு அறிந்திருந்தாலும், கற்றது கை மண் அளவு, கல்லாதது உலகளவு என்கிறோம். அதாவது, இந்த நேரத்திலும் கூட படைப்பைப் பற்றிய யதார்த்தமான உண்மைகள் இரகசியங் களாகவே இருக்கின்றது என்பதுதான். ஏனெனில் கற்பனை களை உண்மை என்று நம்புமளவுக்கு, யதார்த்தமான உண்மைகள் உள்ளங்கை நெல்லிக்கனியாகத் தென் பட்டாலும், இதை ஏற்றுக் கொள்ள நாம் இன்னும் தயாராகவில்லை.

உதாரணமாக, இப்பூவுலகில் வாழ்ந்துக் கொண்டிருக்கின்ற நாம் எங்கிருந்து வந்திருக் கின்றோம்? பிரம்மம் என்று ஓரளவுக்குப் புரிந்து கொண்டிருக்கின்றோம். ஆனால் இதுதான் மகா சக்தியாக விளங்கும் பரமாத்மா வின் உறைவிடம் என்றோ, இப்பூலோக நாடகத்தில் நடித்துக் கொண்டிருக்கும் ஆத்மாக்களாகிய நாமும் கூட பிரம்மலோகத்திலிருந்துதான் வந்திருக்கின்றோம் என்றோ, அறியாதிருக் கிறோம். உண்மையை ஏற்பதில் எவ்வளவு காலதாமதம் செய்தாலும், கற்பனை கள் ஒருபோதும் உண்மையாகப் போவதில்லை.

பிரம்மம் என்பது ஒளிமயமாக விளங்கும் ஆறாவது தத்துவம். எல்லாம் வல்ல

## சங்கமயுகம்

## பொருளடக்கம்

மலர்: 28 பிப்ரவரி மார்ச் 2014-15 இதழ்: 6


| | |
|---|---|
| 1. தலையங்கம் | 01 |
| 2. பகவான் வாக்கு | 04 |
| 3. தியானம் செய்வோம். | 05 |
| 4. சுட்டி படு சுட்டி | 10 |
| 5. சிறு கதை (தயாள குணம்) | 13 |
| 6. சொர்க்க லோகம் | 15 |
| 7. கோபம் | 22 |
| 8. விழிப்புணர்வு | 25 |
| 9. வெற்றிகரமான மாணவ வாழ்க்கை | 27 |
| 10. சங்கமயுகத்தின் அதிசயம் | 31 |


இந்த இதழில் வெளியாகும் ஆன்மீகக் கருத்துக்கள் கலியுகத்தின் இறுதியான இன்றைய புருஷோத்தம சங்கமயுகத்தில் அனைவருக்கும் ஆன்மீகத் தந்தையாக விளங்குகின்ற பரமபிதா பரமாத்மா, பிரஜாபிதா பிரம்மா மூலமாக இப்பூவுலகில் மீண்டும் தர்மத்தை ஸ்தாபனம் செய்வதற்காக அருளிச் செய்த மகாவாக்கியத்திலி ருந்து தொகுத்து வழங்கப் பட்டவையாகும்.
ஆசிரியர்

**“தூய்மையே சங்கமயுகத்தின் ஆஸ்தி”**

இறைவன் பரமாத்மாவாகிய பரமன் வாசம் செய்யும் இருப்பிடம் இதுவாக இருப்பதால் இது பரந்தாமம் என அழைக்கப்படுகிறது. இது சூரியன், சந்திரன் மற்றும் நட்சத்திரங் களுக் கெல்லாம் அப்பால் உள்ள செம்பொன்னிற ஒளி சூழ்ந்த இடம். இது சதா சம்பூரண சாந்தம் நிலவியிருக்கும் இடமாதலால், இதற்கு சாந்திதாமம் என்ற பெயருண்டு. நட்சத்திரப் புள்ளி வடிவாக விளங்கும் ஆத்மாக்கள் இங்கிருந்து தான் பூலோக நாடகமேடைக்கு வருகின்றன. இங்கு வந்தவுடன் தத்தமக்குரிய சரீரம் எனும் ஆடையைத் தரித்துக் கொள் கின்றன. ஆத்மாக்களும், பரமாத்மாவைப் போலவே சாசுவதமானது. காட்சிக்குத் தகுந்தாற் போல், வேடம் மாறுவதைப் போல ஆத்மா வானது உலக நாடகத்தில் வெவ்வேறு சரீரத்தைத் தரிக்கும் போது, அதைப் பிறவி என்கிறோம். ஆத்மா கண்ணுக்குப் புலனாவ தில்லை. அது சரீரத்தில் இருக்கும் போது மனிதனாகக் காட்சியளிக்கிறது. அப்போது, ஆத்மா சரீரத்திற்கானப் பெயரைத் தாங்கி நிற்கின்றது. பிற்காலத்தில் பிறப்பையொட்டிய மதத்தையும் ஏற்றுக் கொள்கின்றது. இவை யெல்லாம் அடையாளத்திற்குத்தான். ஆத்மாவுக்குப் பெயர் ஆத்மாதான். இதற்கு வேறு பெயர் இல்லை. மதமுமில்லை. ஆத்மா வின் மதம் அதாவது ஆத்மாவின் சுய தர்மம் அமைதி (சாந்தி) என்பதாகும். நாம் அனைவரும் சாந்திதாமம் என்ற இல்லத்தைச் சார்ந்தவர்கள். வெவ்வேறு கண்டங்கள், தேசங்கள் என்ற அறிமுகமெல்லாம் நாடகத் திற்காகத்தான் இதை உள்ளவாறு உணர்ந்து கொண்டால், வேற்றுமைகள் விலகிப் போகும்.

இப்பிரபஞ்சத்தின் அதிபதியாக இருக் கின்ற இறைவனின் உறைவிடம் பரந்தாமம். இறைவனுக்கு உருவமுண்டு, பெயருமுண்டு. உருவில் நட்சத்திரப்புள்ளியாக விளங்கும் ஆத்மாதான். ஆனால் மற்ற ஆத்மாக்களைப் போல் அல்லாமல், மாறாத தனித்தன்மை யுடையவராக, குணங்களில், ஞானத்தில், வல்லமையில் கடலாக விளங்கும் பெருமை யுண்டு. இவர் பிறவிச் சக்கரத்தில் கட்டுப் பட்டிருக்கவில்லை. ஆதலால் இவர் தனக்கென சரீரமில்லாத அசரீரி. இவர் என்றும் கல்யாணகாரி (நன்மை செய்பவர்) என்ற பொருளையுடைய சதாசிவம் என்ற பெயர் இவருக்குண்டு. இவர் எல்லாம் அறிந்த வராகவும், சர்வ சக்திவானாகவும் இருந்தாலும், தனது சக்திகளை எங்கே, எப்போது, எவ்வளவு மற்றும் எப்படிப் பயன்படுத்த வேண்டும் என்ற ஞானமும், அதிகாரமும் உடையவராக இருக்கின்றார். படைப்பும், கர்மமும், அனுபவமும் நீதியின் அடிப்படையில் இம்மியும் பிசகாமல், நிச்சயிக்கப்பட்டதாக இயங்கிக் கொண்டேயிருக்கிறது என்பது பகவான் வாக்கு. இவ்வாறு இறைவனையும், படைப்பு பற்றிய உண்மையையும், உலக நாடகத்தைப் பற்றியும் அவர் மூலமாக அறிந்த சத்திய ஞானத்தைப் புரிந்து கொண்டாலும், இது இப்படி, அது அப்படி என்று புரியாமல் அடம் பிடித்தாலும் குழந்தைதானே! அப்படித் தானிருக்கும் என்பதை அவர் அறிந்தவராக இருக்கின்றார். அமைதி சொரூபமாக விளங்கும் ஆத்மாவாகிய நான், அமைதியின் கடலாக விளங்கும் பரமாத்மாவின் குழந்தை. இவ்வாறு நாம் யதார்த்தமாக ஒரு நாள் புரிந்து கொள்வோம் என்ற நம்பிக்கை அவருக்குண்டு.

எதுவரையிலும் நான் என்னுடைய சுய உணர்வில் இருந்தேனோ அதுவரையிலும் நான் எல்லா சுகத்தையும் அனுபவம் செய்தேன். எப்போது நான் சுய உணர்விலி ருந்து விலகி விட்டேனோ, அப்போது எனது சுகமான அனுபவங்களும் என்னை விட்டு விலகிப் போய் விட்டன. ஆகையால், இதை உணர்ந்து மீண்டும் எனது சொந்த இயல்புக்குத் திரும்ப வேண்டும். அமைதியின் உறைவிட மான பரந்தாமத்தையும், அமைதி யின் கடலான பரந்தாமனையும் நினைவிற்

கொள்வதன் மூலம், நான் உண்மையில் யாரோ, அவ்வாறே ஆகிவிடுவேன். இவ்வாறு ஆவதும் இப்போதுதான். ஏனெனில் கதியும் (முக்தி) சத்கதியும் (ஜுவன் முக்தி) அளிக்கும் வள்ளலாகிய பரமாத்மாவின் வருகை இன்றைய சங்கமயுகத்தில் தான். ஆத்மாக்களும், பரமாத்மாவும் சந்திக்கும் காலம் சங்கமயுகம். வேறு எந்த யுகத்திலும் இல்லை

## அன்பான என் உயிரே - பி.கு நடனேஸ்வரி யாழ்ப்பாணம், இலங்கை



எந்தன் உயிரே எந்தன் உயிரே
உந்தன் நினைவே என் உள்ளம் எல்லாம்
எண்ணம் எல்லாம் உன் உருவே
இன்பத்திற்கு இணையே இல்லை

கண்கள் என்றும் உன்னை நாடும்
கைகள் எல்லாம் உன் பணி புரியும்
நேரம் எல்லாம் உன் நினைவே
நினைவு நின்றால் நிலை தடுமாறும்

நினைத்த நேரம் நினைத்த இடத்தில்
உலகைப் பார்ப்போம் மாஸ்டர் உலக உபகாரிகள்
கலியுகம் அறியாத உயிர்கள் நாம்
உங்களுடன் தானே, நாங்கள் உள்ளோம்

சங்கமயுக நிறைவை நினைக்க
சங்கடமாய் உள்ளது உயிரே
காற்றாகி ஒலியும் இசையுமாய்
கால மெல்லாம் இணைந்திருப்போம்

கடலாகி அலையாய் நுரையாகுவோம்
வானாகி ரவி மதியாகுவோம் உயிரே
மண்ணாகி விதை வேர் மரம் ஆவோம்
தீயாகி அனலாகி தீயதெல்லாம் தீர்ப்போம்

எந்தன் உயிரே எந்தன் உயிரே
எண்ணம் எல்லாம் கரும்பாய் இனிக்கும்
பிரியாது இருக்க வழி சொல்வாய் உயிரே
பொழுதெல்லாம், புதிது புதிதாய் பொதுப்பணி புரிவோம்

நாடகத்தை எண்ணி திருப்தியாய் வருவதை ஏற்போம்
பாகம் எதுவோ முயற்சியால் நிறைவாக நடித்துவிடுவோம்
சத்தியப் பிரபுவின் சத்தியக் குழந்தைகள் நாம்
சர்வசக்தி வானுக்கு நன்றி பல.
ஆஹா பாபா ! ஆஹா பிராமணர் !! ஆஹா நாடகம் !!!




இனிமையான குழந்தைகளே! நீங்கள் இராஜயோகிகள். ஆத்ம சிம்மாசனத்தில் அமர்ந்திருப்பவர்கள். நீங்கள் தூய்மையானவர்கள். நீங்கள் சதா என்னுடைய சம்மந்தத்தில் இருப்பதால் ஆனந்த நிலையில் இருக்கின்றீர்கள். நீங்கள் திவ்ய புத்தியுடையவர்களாகவும், ஈஸ்வரிய ஞானமுள்ளவர்களாகவும் இருப்பதால், அசுர சுபாவங்களிலிருந்து விடுதலை பெற்றவர்களாக இருக்கின்றீர்கள். இது உங்களை உலக சேவைக்குக் கருவியாக இருக்கும் தகுதியை உங்களுக்கு அளிக்கின்றது. இம்மாதிரி யாருடைய வாழ்க்கை தூய்மையானதாகவும், சாந்தமுள்ளதாகவும் இருக்கின்றதோ, அவர்கள் மற்றவர்களுக்கு வழிகாட்டும் தீபமாக இருக்கின்றார்கள். ஆதலால் நீங்கள் எனக்குப் பிரியமானவர்களாக இருக்கிறீர்கள். இவ்வாறு இன்றைய புருஷோத்தம சங்கமயுகத்தில் நீங்கள் தூய்மையாகவும், இராஜயோகியாகவும் ஆவதன் மூலம் பாரத பூமியில் மீண்டும் தேவலோகத்தை நிர்மாணிக்கும் எனது காரியத்தில் உதவியாளர்களாக ஆக முடியும். இவ்வாறு தன்னை அர்ப்பணித்துக் கொள்பவர்களே, அடுத்து வரும் புதிய உலகில் முதற் பிறவியில் சூரிய வம்சத்தைச் சார்ந்தவர்களாகவும், பின்னர் பூஜைக்குரிய மூர்த்திகளாகவும் விளங்கும் மகிமைக்குரியவர்களாக ஆகின்றார்கள்.

# தியானம் செய்வோம்

பகவான் உபதேசிக்கும் மன் மனாபவ எனும் தாரக மந்திரம் இராஜயோக தியானத்தைக் குறிக்கின்றது. உன் மனதை என்னிடம் செலுத்து என்பது இதன் பொருள். உன் மனதை என்னிடம் செலுத்துவாயானால் மனம் அற்புதங்களைப் படைக்கும் என்ற இரகசியத்தை உபதேசம் செய்ததாக அமைந்திருக்கின்ற சொல் மன்மனாபவ என்பது. மனதை பூர்ணமாக அறிந்திருப்பவர் பகவான் (பரமாத்மா) ஒருவர் மட்டுமே. ஞானேந்திரியங்களான மனம், புத்தி மற்றும் சம்ஸ்காரம் என்ற இந்த மூன்றில், நினைக்கும் திறன் மனதிற்கு மட்டுமே உண்டு. ஆகவே தான் மன் மனா பவ என்று பகவான் உபதேசம் செய்திருக்கின்றார். நினைக்கின்ற மனமும் நினைக்கப்படுகின்ற பரமாத்மாவாகிய பகவானும் சூட்சுமம். ஆதலால் மனதை பகவானிடம் செலுத்துவது என்பது ஒரு கலை. இக்கலையைத்தான் தியானம் என்கிறோம்.

இந்த உலகம் வர்ணிக்க முடியாத பல அற்புதங்கள் அடங்கிய ஒன்றாக இருப்பது கண் கூடு. கலையழகு மிளிரும் இயற்கை வண்ணமும், வளமையும், அதன் பசுமையும் அழியாக்கோலங்களாக, கண் கொள்ளாக் காட்சியாக பரிமளிக்க, இம்மண்ணில் மனிதன் படைத்திருக்கின்ற பிரமிப்பூட்டும் கலைத்திறன் கொண்ட கட்டிட கட்டமைப்பும், அறிவியல், தொழில் நுட்பம் மற்றும் வானவியல் முன்னேற்றமும் அயரவைக்கும் அற்புதங் களாகும். எனினும் இவையனைத் தையும் விட, மிகச் சிறந்த அற்புதம் ஒன்று உண்டு எனில் அதுதான் மனிதனுடைய மனம், மனிதனை இயக்குவது மனம் தான். நாம் வெளியில் காணுகின்ற படைப்புகள் ஒவ்வொன்றும் முதலில் மனதில் தான் படைக்கப்பட்டது. வரலாறும், விஞ்ஞானமும், கலாச்சாரமும், வர்த்தகமும், உலகில் ஒவ்வொரு நாளும் நாம் காணுகின்ற மனிதனுடைய ஒவ்வொரு படைப்புக்கும் அவசியமாயிருக் கின்ற ஆற்றலை அளிப்பது மனம் தான். இந்த மனமானது ஸ்தூலமாக பௌதீகப் பொருளில் ஈடுபாடுடன் ஒருமுகப் பட்டு இவ்வளவு மகத் தான அற்புதங் களைப் படைக்க முடிந்திருக் கிறதென்றால், மனமானது தன்னைப் பற்றி அறிவதில் ஒருமுகப்படுமானால் இன்னும் எத்தனையோ அற்புதங்கள் நிகழக்கூடும். ஆரம்பத்திலேயே குறிப் பிட்டுள்ளதைப்போல மனமானது பகவானிடம் ஒருமுகப்படுமானால் இந்த பூமி சொர்க்கமாகவும், இந்த மனிதன் தேவனாகவும் பரிணமிக்கின்ற அற்புதம் நிகழும்.

தியானம் செய்ய வேண்டும் என்று முன்னைவிட இப்போது அநேகர் விரும்பு கின்றனர். மனிதனுக்கு அமைதி தேவை என்பதன் அறிகுறிதான் இது. தியானம் என்பது சந்நியாசிகளின் தர்மம் என்றும், குல வாழ்க்கையில் இருப்பவர்களுக்கு, இதில் சம்மந்தமில்லை என்று நினைத்த காலம் உண்டு. ஏனெனில் வீடு வாசலையும், மனைவி மக்களையும் துறந்து கானகம் செல்ல வேண்டும். தனியே அமர்ந்து தவம் செய்ய வேண்டும். இப்படி எல்லோராலும் செய்ய முடியாது. ஆதலால் அவசியமில்லை என்றும் நினைத்ததுண்டு. உண்மையில் தியானம் என்பது வாழ்க்கையில் இன்றியமையாத ஒரு அம்சம் என்று இப்போது புரிந்து கொண்டிருப் பது ஒரு நல்ல சகுனம். சந்நியாசிகள் மட்டுமே தியானம் செய்ய முடியும். அல்லது அவர்கள் மட்டுமே தியானம் செய்யட்டும் என்பது தவறான அபிப்பிராயம். உண்மையில் சந்நியாசிகளை விட, இல்வாழ்க்கையில்

இருப்பவர்களுக்கு அதாவது சந்நியாசிகளைப் போலல்லாமல் கர்மத்தைத் துறக்காமல் இருப்பவர்களுக்குத்தான் தியானம் மிக மிக அவசியமானதாகும். கர்மம் செய்வதை வாழ்க்கையிலிருந்து பிரிக்கவே முடியாது. கர்மம் இல்லையேல் வாழ்க்கையுமில்லை. பகவானுடைய உபதேசம் கர்ம சந்நியாசம் அல்ல. கர்மயோகம் என்பது நினைவு கூறத் தக்கதாகும். வாழ்க்கையில் இன்பம் உண்டு. துன்பமும் உண்டு. இது நாம் செய்கின்ற கர்மத்தின் பலன். வாழ்க்கை இன்பமான தாகவே இருக்க வேண்டுமென்பதற் காகவே பகவான் கர்மயோகியாயிரு என்பதாக இருக் கின்றது. கர்மயோகம் என்றால் பகாவானுடைய நினைவில் கர்மம் செய்வது மேலும் கர்மத்தின் பலனில் பற்று வைக்காதே என்பதாகும்.

மறந்து விட்டோம். மறதி எனும் நோய் காரணமாக அவ்வாறு நடக்கத் தவறிவிட்டோம். ஆதலால் இப்போதாவது அவ்வழி நடக்க வேண்டுமென்ற உணர்வு விழிப்படைந்திருக் கிறதென்றால், இதற்கு உதவுகின்ற ஒரு கலைதான் தியானம். தியானம் செய்வதற்கு ஆத்மீக ஞானம் வேண்டும். ஞானம் என்பது, ஒவ்வொரு கர்மத்தையும் பகவானுடைய நினைவில் செய்ய வேண்டும் என்ற நல்வழியினைக் காட்டுகின்றது. ஞானத்தின் முக்கிய அம்சமாயிருப்பது, நான் வேறு, நான் இருக்கும் இந்த உடல் வேறு என்பதாகும். நான் இருக்கும் வரை இந்த உடல் இயங்கும் இந்த உடலில் உள்ள கர்மேந்திரியங்கள் என்னுடைய உபயோகத்திற்காகக் கொடுக்கப் பட்டிருக்கின்ற கருவிகள். இவற்றைப் பயன்படுத்தும் எஜமானன் நான். இந்தக் கருவிகளை நான் எப்படிப் பயன்படுத்து கிறேனோ, அதற்கேற்ப பலனை அனுபவம் செய்வேன். இதில் தியானம் எப்படி உதவும்? நான் கர்மம் செய்வதற்காக எனது கர்மேந்திரி யங்களைப் பயன்படுத்துவதற்கு முன்பாக, பகாவனுடைய நினைவில் ஒன்றிவிட வேண்டும் நான் என்ன கர்மம் செய்ய உத்தேசித்திருக்கிறேன் என்பதற்கு காரணமான எண்ணம் என்னுடைய மனதில் தான் உதித்தது. என்றாலும், என்னுடைய எண்ணம் இப்போது பகவானிடம் இருப்பதால் நடக்க விருக்கும் கர்மம் பகவானிடம் ஒப்படைக்கப் பட்ட ஒன்றாக ஆகிவிடுகிறது. இதன் காரணமாக கர்மம் செய்வது நான் தான் என்றாலும் கர்மத்திற்கும் எனக்குமுள்ள நேரடி சம்மந்தத்திலிருந்து விடுபட்டு விடுகிறேன். ஏனெனில் நானும் பகவானுடைய கருவியாக ஆகிவிடுகிறேன். ஆதலால் அந்தக் கர்மம் என்னைப் பந்தப் படுத்தாது. நடக்க வேண்டிய முறைப்படி கர்மம் நிறைவேறிவிடும். பற்றிலி ருந்து விடுபடுவதற்கு இந்த ஒரு வழிதான் உண்டு. தியான அப்பியாசத்தின் மூலமாக இப்படி கர்மம் செய்வதை இயல்பாக்கிக் கொள்ள முடியும். தியானம் செய்வதற்கு ஆதாரமாக இருக்கின்ற எண்ணங்கள் எவை?

நான் யார்? எனது சொரூபம் என்ன? நான் ஜோதி சொரூபமான ஆத்மா. நான் அமைதி சொரூபமான ஆத்மா என்பதாகும். தியானம் ஒவ்வொருவருக்கும் அவசியமான ஒன்று. இதை எல்லோரும் எளிதாகச் செய்ய முடியும் என்றாலும் இதற்கான சில விதி முறைகளை அனுசரித்துச் செய்யும் போதுதான் நாம் விரும்புகின்ற மன அமைதியையும், தெய்வீக சுகமளிக்கும் அனுபவங்களையும் பெற முடியும். தியானம் என்பது ஆத்மாவின் அதி சூட்சுமமான பயணமாகும். மன அமைதிக்காகவும்,தெய்வீக அருள் வேண்டியும் அன்றாடம் பாவனையாக சில முயற்சிகளைச் செய்து கொண்டுதானி ருக்கிறோம். ஆனால் இதுபோதுமானவையல்ல. ஏனெனில் நாள் முழுவதும் நமது எண்ணங் களும், விவகார மும் ஸ்தூலமான தேகம் சம்மந்தப்பட்ட ஒன்றாகவே இருக்கின்றது. மேலும் உலகாயதமான விருப்பங்கள் நிறைவேற வேண்டும் என்ற எண்ணம் தான் மனதில்

மேலோங்கியிருக்கின்றது. ஆகவேதான் தியானம் செய்யும் முறையைத் தெரிந்து செய்ய வேண்டும் என்று சொல்லப்படுகிறது.

தியானம் செய்வதற்கு முக்கியமானது நான் ஆத்மா என்பதில் நிச்சயம் மற்றும் ஆத்ம சிந்தனை. ஆத்ம சிந்தனை என்பது நான் இந்த சரீரத்தில் இருந்தாலும், இதிலிருந்து விலகியிருக்கும் அதி சூட்சுமமான ஒளிப் புள்ளியாக சுடர் வீசும் ஆத்மா இந்த சரீரம் எனது வீடு. நான் இந்த வீட்டில் தற்காலி கமாக குடிகொண்டிருக்கிறேன் எனது உண்மையான வீடு இதுவல்ல. இந்த பூலோகத் தில் எனக்கு நிச்சயிக்கப்பட்டிருக்கிற பாத்திரத் தில் நடிப்பதற்காக வந்திருக்கிறேன். எனது உண்மையான வீடு பரந்தாமம். அங்கு நான் அசரீரியாகவே இருந்தேன். ஒரு நட்சத்திரம் எப்படி காட்சியளிக்குமோ, அப்படித்தான் இருந்தேன். அதுதான் என்னுடைய உண்மை யான சொரூபம் நான் இங்கு வந்த பிறகு இந்த சரீரம் எனும் ஆடையை அணிந்து கொண்டேன் என்பது.

இத்துடன் இன்னொரு பயிற்சியும் அவசியம் நான் மற்றவருடைய தொடர்பில் வரும்போதும் நான் ஆத்மா என்பதை நினைவுபடுத்திக் கொண்டேயிருக்க வேண்டும். இதற்காக இப்படி சிந்தனை செய்யலாம். அதாவது இந்தக் கண்கள் மூலமாகப் பார்க்கிறேன். வாய் மூலமாகப் பேசுகிறேன். காதுகள் மூலமாகக் கேட்கிறேன், கர்மேந்திரியங் கள் மூலமாகக் கர்மம் செய்வதும் நான் தான். இந்த இந்திரியங்கள் எனது உபயோகத்திற்காகக் கொடுக்கப்பட்ட சாதனங்கள். ஒரு வகையில் இவைகள் எனது சேவகர்கள். எல்லா கர்மங் களையும் செய்து கொண்டேயிருந்தாலும் நான் அசரீரி என்பதை உறுதி செய்வதற்கு இது ஒரு நல்ல யுக்தியாகும். தியானத்தின் அனுபவங்கள் இந்த அஸ்திவாரத்திலேயே நின்று கொண்டிருக்கின்றன. ஆதலால் இத்தகைய சிந்தனை அடிக்கடி செய்து கொண்டேயிருக்க வேண்டும். இது தேக உணர்விலிருந்து ஆத்மா விலகியிருக்க உதவுகிறது என்பதையும் உறுதி செய்து கொள்ள முடிகிறது. இந்த சரீரம் சாசுவதமான ஒன்றல்ல. இதை விட்டு நான் விலகத்தான் வேண்டும். ஆதலால் ஆத்மாவாகிய நான் இந்த உடலில் இருக்கும் போதே விலகி யிருக்கும் பயிற்சியும் செய்து கொண்டே யிருந்தால் தேக அபிமானத்திலிருந்து வெகு சீக்கிரமாகவே விடுபட்டு விடுவேன். தேக அபிமானம் தான் பாவ கர்மம் செய்யத் தூண்டு கிறது. இதுதான் துன்பத்திற்கும் காரணமாக இருக்கிறது.

அடுத்து தியானம் என்பது ஆத்மாவுக் கும், பரமாத்மாவுக்குமிடையேயான சம்மந்தம், பல பிறவிகளாக நான் தேக சம்மந்தத்திலேயே இருந்ததால், ஆத்மாவை தேகாபிமானம் சிக்கெனப் பிடித்துக் கொண்டு விட்டது. இதிலி ருந்து விடுபடுவதென்பது பிரம்ம பிரயத்தனம் எனலாம். அதாவது பிரம்மா விடுதலையடை வதற்காக எத்தகைய முயற்சிகளை மேற் கொண்டு வெற்றி கண்டாரோ, அவ்வாறே முயற்சி செய்ய வேண்டும் என்பதாகும். தேக உணர்வும், உலகாயத எண்ணங்களுமே மனதை ஒரு முகமாக லயிக்கவிடாமல் தன் பக்கமாக கவர்ந்திழுக்கின்றன. ஆரம்பத்தில் தியானம் செய்யும் போது இத்தகைய தடங்கல்கள் வரும். இப்படி வரும்போதெல்லாம் ஆத்ம சிந்தனையில் மனதைத் திருப்ப வேண்டும். அதாவது சிரேஷ்டமான எண்ணங் களை மனதில் கொண்டு வர வேண்டும். இவ்வாறு மனதை பழக்கப்படுத்த வேண்டும். இதன் பிறகு யாரை நினைத்து தியானம் செய்கிறோமோ, அவரிடம் மனதை லயிப்பது சுலபமாகிவிடும் வேண்டாத எண்ணங்களின் குறுக்கீடுகள் தற்காலிகமானவையே. ஆகையால் நம்பிக்கை தளரக் கூடாது. சோதனைகள் மனதை திடப்படுத்துவதற்கு உதவக்கூடிய

ஒத்தாசைக்கரங்கள். எந்த ஒரு கலையும் பயிற்சி செய்யச் செய்ய இயல்பாகிவிடும். மனம் சூட்சுமமானது ஆதலால் தான் அப்பியாசம் தொடர்ந்து செய்வது அவசியமாகிறது.

பொதுவாக இதுவரையிலும் இறைவனை வழிபட்டு வந்திருக்கிறோம். பிரார்த்தனை செய்திருக்கிறோம். ஆனால் இறைவனைப் பற்றிய உண்மைகள் தெரியாமலேயே செய்து வந்தோம். மனித வழியைப் பின்பற்றி செய்து வந்தோம். அம்மையப்பா என்று அழைத் தோம். காட்ஃபாதர் என்று சொன்னோம். ஆனால் சம்மந்தம் வைத்துக் கொள்ளவில்லை. உண்மையில் இறைவன் யார்? பரமாத்மா யார்? அவர் எனக்கு என்ன உறவு? தியானம் செய்யும் போது நான் யாரை நினைக்கிறேன். நான் ஆத்மா. பரமாத்மா எனது தந்தை. இந்த சம்மந்தத்தை அறிந்து, உணர்ந்து நிச்சய புத்தியோடு, உரிமையோடு நினைவு செய்யும் போதுதான் மனம் மகிழும். இந்த நெருங்கிய சம்மந்தம் தான் அவரிடமிருந்து பெறுகின்ற பிராப்திக்கு ஆதாரம். பிராப்தி என்பது தூய்மை, சாந்தி, அன்பு, ஞானம், குணம், சக்தி ஆகியன. இது தான் நம் மகிழ்ச்சிக்கு ஆதாரம். பரமாத்மா, ஆத்மாவாகிய என் தந்தை என்று அறியாத காரணத்தாலேயே அவரிடமிருக்கும் பொக்கிஷத்தை அடைவதற்கு எனக்கு உரிமை உண்டு என்பது தெரியாமல் போய் விட்டது. நான் பரமாத்மாவின் குழந்தை. குழந்தை என்றால் வாரிசு. தந்தையின் சொத்துக்கு உரிமையாளன். இந்த உண்மையான சம்மந்தமே சுகமளிக்கும் சம்மந்தமாகும். இந்த அனுபவம் பெற்றுவிட்டால், நினைவு செய்வதற்காக தியானம் செய்ய வேண்டும் என்பதற்குப் பதிலாக, அந்த நினைவு இயல்பான ஒன்றாக ஆகிவிடும் யாரிடம் அன்பு இருக்கிறதோ, அவரை நினைவு செய்வதற்கு முயற்சி செய்ய வேண்டிய அவசியம் இருக்காது.

தியானம் என்பது ஆத்மீக பயணம் என்று ஏற்கனவே பார்த்தோம். ஆதலால் இது ஆத்மாவின் யாத்திரை. ஆத்மாவாகிய நான் இப்போது பூலோகத்தில் இந்த சரீரத்தில் இருக்கிறேன். இங்கிருந்து கொண்டு நினைவின் மூலமாக, பரந்தாமத்தில் இருக்கும் பரமாத்ம தந்தையை சந்திப்பதற்கான சூட்சும யாத்திரை செய்யும் யாத்ரீகன் நான். தந்தை பரமாத்மாவின் இருப்பிடம் பரந்தாமம். அது ஜோதிமயமாகவும், அமைதியும் நிலவும் ஆறாவது தத்துவம். நானும் கூட இங்கு வருவதற்கு முன் அங்குதான் இருந்தேன் இங்கு வந்த பிறகு பல பிறவிகள் எடுத்தேன். பல வேடங்கள் தரித்தேன். இவ்வாறாக கலி யுகத்தின் கடைசி நேரமும் வந்து விட்டது. இந்த உலகில் நான் கொஞ்ச காலத்திற்கு யாத்ரீகனாக வந்தேன். இப்போது நான் அங்கு திரும்பிச் செல்ல வேண்டும். நடிகர்கள் என்றாலே, நாடகம் முடிந்த பின் அவரவர் வேடத்தை களைந்து விட்டு, வீட்டுக்குத் திரும்பிச் சென்று விடுவார்கள் அல்லவா ! வேடத்தை கலைத்த பிறகு அவர்களுடைய உண்மையான ரூபத்தில் இருப்பார்கள். இதுபோல வேதான் ஆத்மாவாகிய நடிகரும் கூட நாடகத்திற்காக அணிந்து கொண்ட சரீரம் எனும் வேடத்தைக் கலைத்துவிட்டு பரந்தாமம் செல்ல வேண்டும்.

நான் ஜோதி சொரூபமாக விளங்கும் ஆத்மா. சரீரத்திலிருந்து தனிப்பட்டவன். இப்போது நான் ஜோதிமயமான வீட்டிற்குத் திரும்ப வேண்டும். அதர்மம் நிறைந்த இந்த உலகம், தர்மம் நிறைந்த உலகமாக மாறப் போகிறது. சுயநலமும், பொறாமையும், கோபமும், பேராசையும், மனிதனை ஆட்டிப் படைத்துக் கொண்டிருக்கிறது. இதன் காரணமாக இயற்கை சீற்றங்களும், விபத்துக் களும், யுத்த பீதியும் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டேயிருக் கின்றது. இது மாயா உலகமாக மாறிவிட்டது. ஆதலால் நான்

வீடு திரும்ப வேண்டும். இவ்வாறாக சிந்தனை செய்யும் போது உலகாயத சிந்தனைகள் இயல்பாகவே விலகிவிடும். பரந்தாமத்தைப் பற்றியும், பரமாத்மாவைப் பற்றியும் மனம் ஒரு முகப்பட்டு விடும். இப்போது இருக்கு மிடத்தைக் காலி செய்ய வேண்டும் என்று நிச்சயமாகிவிட்ட பிறகு, இந்த இடத்தைப் பற்றிய கவர்ச்சியும், தானாகவே பலவீனமாகி விடும். உதாரணமாக ஒருவர் ஊரைவிட்டு, வேறொரு ஊருக்குச் செல்லத் தீர்மானித்து விட்டால், அவருக்கு அந்த ஊரைப் பற்றிய நினைவு தான் அதிகமாக இருக்கும். இதுபோல ஒருவர் தான் குடியிருக்கும் வீட்டைக் காலி செய்து விட்டு, வேறொரு வீட்டில் குடியேற வேண்டும் என்று முடிவு செய்து விட்டால், இந்த வீட்டிலுள்ள தட்டு, முட்டு சாமான்களை யெல்லாம் ஒழுங்குபடுத்திவிட்டு, புது வீட்டில் குடியேறுவதற்காகத் தயாராகி விடுகிறார். இதுபோலவே அலுவலகத்தில் வேலை செய்யும் ஒருவர் காலையில் எழுந்தவுடனேயே அலுவலகம் எண்ணம் தான் வரும். புறப்படு வதற்கு முன் என்னவெல்லாம் தயார் செய்ய வேண்டுமோ அதிலேயே கவனமாகவும் இருப்பார். நேரமாகிவிட்டதா என்று அடிக்கடி கடிகாரத்தைப் பார்த்துக் கொண்டே இருப்பார். வீட்டைப் பற்றிய கவனம் குறைந்து, அலுவலகம் பற்றிய கவனமே அதிகமிருக்கும். மேலும் அலுவலக வேலைகள் முடிந்து மாலை நேரம் வரும் போது அவருடைய கவனம் அலுவலகத்தை மறந்து, வீட்டைப் பற்றியதாக ஆகிவிடுகிறதல்லவா?

இதுபோன்ற ஒரு நிலையில்தான் ஆத்மா இப்போது இருக்கின்றது. காலக்கடிகாரத்தின் முள், வீடு திரும்ப வேண்டிய நேரம். ஆகி விட்டதைக் காட்டுகிறது. ஆதலால் இப்போது நம்மிடம் ஒரே ஒரு எண்ணம் மட்டும் தான் மேலோங்கி இருக்க வேண்டும்.

அது நான் வீடு திரும்ப வேண்டிய நேரம் ஆதலால் நான் தயாராக இருக்க வேண்டிய நேரம். அப்படியானால், இப்போது நான் என்ன செய்ய வேண்டும்? இந்த எண்ணமானது, இதுவரையிலும், இந்த உலகில் யார், யாரிட மெல்லாம் சம்மந்தம் வைத்திருந்தோமோ, அவற்றிலிருந்தெல்லாம் விடுவிக்கும்.

மனதிலும், புத்தியிலும் பரமாத்மா, பரந்தாமம் என்ற இனிமையான நினைவும், அந்த காட்சியுமே இருக்கும். இந்த நினைவு ஒன்றுதான், மற்ற எல்லாவற்றையும் விட மனதிற்குப் பிடித்தமான ஒன்றாகவும் இருக்கும். **இது தான் தியானம்**

## அறிவிப்பு

சங்கமயுகம் 6வது இதழான இது இவ்வாண்டின் (2014-2015) கடைசி இதழாகும். தொடர்ந்து பிரதி வேண்டுவோர் ஏற்கனவே அறிவித்துள்ளபடி அந்தந்த பகுதியிலுள்ள சென்டர் மூலமாகப் பெற்றுக் கொள்ளவும். வேறு மாநிலங்களில் இருப்பவர்கள் மணியார்டர் மூலமாக ரூ.60/- ஆண்டு சந்தா பி.கு அண்ணபூர்ணா. சாந்திதாம், சென்னை 600 040, முகவரிக்கு அனுப்பி புதுப்பித்துக் கொள்ள வேண்டும். M.O. Form கீழ் பகுதியில் சங்கமயுகம் என்று குறிப்பிட வேண்டும். மணியார்டர் அனுப்புவோர், இதழ் அனுப்ப வேண்டிய முகவரி, பின் கோடுடன் தெளிவாக எழுதியனுப்ப வேண்டும். டிராப்ட் அனுப்புவோர் " **SANGAMAYUGAM** " என்ற பெயரில் எடுத்து, சென்னை, சாந்திதாம் முகவரிக்கு அனுப்ப வேண்டும். சங்கமயுகம் இதழுக்காக, வேறு பெயரில் எடுக்கப்படும் டிராப்ட் ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை. நன்றி - ஆசிரியர்

# சுட்டி, படுசுட்டி



**சுட்டி:** அண்ணே ! நாடகம், நாடகம், எல்லாமே நாடகம் தான் “ னு” சொல்றாங்க. எனக்கு விவரம் தெரிஞ்ச நாளிலேருந்து இப்படிச் சொல்றதைக் கேள்விப்பட்டிருக்கேன். நீங்களும் கூட சொன்னது நினைவிருக்கு, ஆனா ?

**படுசுட்டி:** இதுலே என்ன சந்தேகம் உங்களுக்கு ?

**சுட்டி:** அண்ணே! உலகத்துலே, இன்னைக் கிருக்கிற ஜனங்களைப் பார்த்தா, எத்தனையோ கோடி இருக்காங்க. இதுலே எத்தனையோ விதமாகவும் இருக்காங்க. இப்படித்தான் நாடகத்துலே இருக்குன்னு சொல்றீங்களா?

**படு சுட்டி :** ஆமா தம்பி. இது ஒரு பெரிய நாடகம். இப்ப கொஞ்ச நேரம் நடக்கிற நாடகத்துலே கூட பல காட்சிகள் இருக்கு. எல்லோரும் ஒரே நேரத்துலே, ஒரே காட்சி யிலே வர்றதுமில்லே, அந்தந்த காட்சியிலே, அவருக்கு என்ன பாகம் இருக்குமோ, அதுக்குத்தகுந்த வேடத்துலேதானே வர்றாங்க!

**சுட்டி:** அப்போ, நாடகத்துலே மெயின் பிளாட், பை பிளாட்டுன்னு சொல்றாங்களே, அது மாதிரி இதுலேயும் இருக்கா?

**படு சுட்டி :** ஆமா தம்பி. இந்த நாடகத்துலே மெயின் பிளாட் “ னு” சொன்னா, மனிதன் தேவனாக வாழ்கின்ற சொர்க்கத்தை இறைவனே வந்து ஸ்தாபனை செய்யறது தான். இவுங்க சூரிய வம்சத்தைச் சேர்ந்த தேவதை கள் “ னு” சொல்றாங்க

**சுட்டி:** அப்படின்னா, பை பிளாட்டுலே முக்கிய மானவங்க யாருன்னு சொல்லியிருக்காங்களா?

**படுசுட்டி:** ஆமா தம்பி. அப்பப்ப வந்து மதத்தை ஸ்தாபனை செய்யுறவங்களைச் சொல்றாங்க. அதாவது ஆபிரஹாம், மோசஸ், புத்தர், இயேசு, இவங்கெல்லாம் பைபிளாட்டுலே முக்கிய மானவங்க.

**சுட்டி:** மெயினா இருக்கிறவங்க இவ்வளவு தானா?

**படுசுட்டி:** தம்பி ! மொத்த நாடகத்துலேயும் சொல்லனும்னா, கலியுகத்துலே பிரம்மா, சரஸ்வதியிலேயிருந்து சொல்லவேண்டி யிருக்கும். இவுங்க நாடகத்துலே மொதல் லேயும் வர்றாங்க. பேரு வேறே. அதுனாலே ஸ்ரீ லட்சுமி, ஸ்ரீ நாராயணர், ஸ்ரீ ராம், சீதை, ஆபிரஹாம், புத்தர், இயேசு, முகம்மது, சங்கராச்சாரியார், குருநானக், இவங்களை முக்கியமான ஆக்டர்ஸ்னு சொல்றாங்க.

**சுட்டி:** சரி, இந்த நாடகத்துலேயிருந்து நாம என்ன தெரிஞ்சுக்கிறோம்?

**படுசுட்டி :** முக்கியமா தம்பி, மனித நாகரீகம் மொத மொதல்லே ரொம்ப உயர்வாகவும், பிறகு குறைஞ்சுகிட்டே வந்து ரொம்பவும் தாழ்ந்தும் போயிருக்கு, இது எப்படிங்கிறது தெரியுது. இன்னொன்னு, பிறவிச் சக்கரத்துலே திரும்பத் திரும்ப எப்படி பிறவி எடுக்கிறாங்கிறதைப் பத்தியும், செய்யிற கர்மத்துலே நல்லது, கெட்டதுங்கிற அடிப்படையிலே இப்படி யெல்லாம் நடக்குதுன்னு தெரிஞ்சுக்கிறோம்.

**சுட்டி:** பிறவிச் சக்கரம் “ னு” எதைச் சொல்றீங்க?

**படுசுட்டி:** காலச்சக்கரம் அப்படீன்னு சொன்னா சரியாயிருக்கும் “ னு” நினைக்கிறேன் தம்பி? நாமெல்லாம் ஆத்மா தானே? நாம மேலாகத் திலிருந்து (பரந்தாமம்) பூலோகத்துலே வந்து

மொதமொதப் பிறவி எடுக்கிறோம். அப்ப நாடகம் ஆரம்பமாகுது அந்த நாடகம் முடியும் போது நாம எடுத்த சரீரத்தை இங்கேயே விட்டுட்டு எங்கிருந்து வந்தோமோ, அங்கேயே திரும்பிப் போயிடறோம். இந்தக் காலத்துக்கு கணக்கு வச்சிருக்காங்க 5000 வருஷம் ‘‘ னு’’ சொல்றாங்க. கல்பம் னும் சொல்றாங்க தம்பி.

**சுட்டி:** காலத்தைப்பத்தி சொன்னது சரி. சக்கரத்தைப் பத்தி....

**படுசுட்டி:** அதைத்தான் சொல்ல வர்றேன். கேளுங்க. மேலோகத்துக்கு திரும்பிப்போறோம் ‘‘ னு’’ சொன்னேனில்லியா, நாம் அங்கேயே நிரந்தரமா இருக்குறதில்லே. திரும்பவும் பூலோகத்துக்கு வர்றோம். இப்படி கணக்குப்படி வர்றது, போறதுமா இருக்கோம். இப்படி தொடர்ந்து நடந்துகிட்டேயிருக்கு. இதை சக்கரம் ‘‘ னு’’ ஏன் சொல்றாங்கன்னா, ஒரு நாடகம் எத்தனை முறை நடந்தாலும், அந்தந்த நடிகர் அதே மாதிரி தானே நடிப்பாங்க! அது போலத்தான் நடக்குது. இது பெரிய நாடகம். இன்னும் ஏதாவது சந்தேகம் இருக்கா?

**சுட்டி:** அண்ணே! நீங்க சொல்றதைப் பார்க்கும் போது, நமக்கு பூலோகமும் நிரந்தரமில்லே. மேலோகமும் நிரந்தரமானதுமில்லே. சரி தான். ஆனா? மேலே போறாம் சரி. திரும்பவும் பூலோகத்துக்கு போங்கன்னு சொல்றது யாரு?

**படுசுட்டி:** தம்பி. இங்கே கூட நடக்குற நாடகத்துலே பல நடிகர்கள் இருக்காங்க. இவுங்க ஒவ்வொருத்தருக்கும் வேற வேற பார்ட் இருக்கும். இதை இவுங்க மனப்பாடம் பண்ணி, எப்போ ஸ்டேஜ்லே வரணுமோ, அப்போ வந்து ஆக்ஷன்லே செஞ்சு காட்டு றாங்க இல்லியா? இதுபோலத்தான் உலக நாடகத்துலேயும் ஒவ்வொருத்தருக்கும் பார்ட் நிச்சயிக்கப்பட்டதா, இருக்கு தம்பி.

**சுட்டி:** அண்ணே! கொஞ்சம் வெளக்கமா சொன்னா தேவலை. நாம மேலோகத்துலே ஆத்மா ரூபத்துலே இருக்கோம். நான் சொல்றது சரியா?

**படுசுட்டி:** சரி தான். நீங்கள் சரியாத்தான் சொன்னீங்க. இன்னும் என்ன சொல்லனுமோ சொல்லுங்க.

**சுட்டி:** அண்ணே! எனக்கு என்ன சந்தேகம் ‘‘ னு’’ சொன்னா மேலேருந்து இப்பத்தான் போகனும் ‘‘ னு’’ இவங்களுக்குச் சொல்றது யாரு?

**படுசுட்டி:** சொல்றேன் கவனமா கேளுங்க தம்பி. நாடகத்துலே அவுங்கவுங்க பார்ட் நிச்சய மாயிருக்குன்னு சொன்னா, அந்தந்த ஆத்மாவுலே அவுங்கவுங்க பார்ட் பதிவா யிருக்குன்னு அர்த்தம். இதுலே ஆச்சரியப் படுகிற விஷயம் இது தான் தம்பி. அதாவது நாடகத்துலே அவுங்க பார்ட் எப்போ வருமோ அந்த நேரத்துலே ஆத்மாவுலே இருக்குறே பதிவுகள் உணர்வுகளா எமர்ஜ் ஆகுது. உடனே கீழே வர்றாங்க. இந்த சக்தி ஆத்மாவுக்கு இருக்கு. இதை மூல விருத்தி அப்படின்னு சொல்றாங்க.

**சுட்டி:** அண்ணே ! அப்போ பூலோகத்துக்கு வரணுங்கிற ஆசை ஆரம்பத்துலேயே இருந்திருக்குன்னு ஆவுது இல்லையா?

**படுசுட்டி:** உங்க சந்தேகம் சரிதான். ஆனால் உண்மை அப்படியில்லே. ஆரம்பத்துலே ஆசை அப்படிங்கிறதே, ஆத்மாவுலே இல்லை. வரணுங்கிற உணர்வுதான் இருக்கு. இதை ஆசைன்னு சொல்ல முடியாது.

**சுட்டி:** அப்படின்னா ? இப்ப மனுஷனுக்குள்ளே இவ்வளவு பேராசை இருக்கே. இது எப்படி?

**படுசுட்டி** : தம்பி, இதைப்பற்றி உங்க கிட்டே இதுக்கு மொதல்லேயும் சொல்லியிருக்கேன். நினைவிருக்கும். யோசிச்சுப் பாருங்க. நாடகத்துலே, ஆரம்பத்துலே யாரெல்லாம் வர்றாங்களோ, அந்த ஆத்மாக்கள், சரீரத்தை

ஆதாரமாக எடுத்திருந்தாலும் கூட எந்த மாதிரியான ஆசா பாசமும் இருக்கலே. கொஞ்ச காலத்துக்குப் பிறகு தான் வந்திருக்கு. பாருங்க தம்பி, நம்ம அனுபவத்துலே கூட பார்க்கிறோம். பத்து, பதினைந்து வருடத்துக்கு மொதல்ல இருந்ததுக்கும், இப்போதைக்கும் கூட எத்தனை வேறுபாடுகளைப் பார்க்கிறோம். தத்துவங்கள்லே, தன்மை மாற மாற, பாதிப்பும் உண்டாகிக்கிட்டே இருக்குன்னு தோணுது. என்ன நினைக்கறீங்க தம்பி.

**சுட்டி:** நீங்க சொல்றதும் சரிதான். இந்த மாதிரி பாதிப்புனாலே தான் ஆசைகளும், அபிமானமும் உண்டாகுதுங்கிறீங்க.

**படுசுட்டி** : ஆமா தம்பி, இதுலேயிருந்து என்ன புரியுதுன்னா, இயற்கையினாலே, நமக்கு பாதிப்பு உண்டாகுது. நம்ம மூலமா இயற்கையும் பாதிப்புக்குள்ளாகுதுங்கிறது தான்.

**சுட்டி** : சரிதான். இருந்தாலும், இப்ப இருக்கிற பேராசைக்கு வேற ஏதாவது காரணம் இருக்குமா. ?

**படுசுட்டி** : வேற காரணமும் இருக்கலாம் தம்பி. எனக்குத் தெரிஞ்ச வரையிலும், ஆரம்ப காலத்துலே, கொடுக்கல், வாங்கல் எல்லாமே பண்ட மாற்றம் “னு” சொல்றாங்களே, அப்படித் தான் இருந்திருக்கு. இப்போ இருக்கிற மாதிரி நாணயங்கள், புழக்கத்துலே அவ்வளவா இருக்கலே.

**சுட்டி:** அண்ணே ! இப்ப புரிஞ்சு போச்சு. ஜனங்ககிட்டே பணப்புழக்கம் வந்ததுக்கப்புறம் தான், ஆசையும் அதிகமாயிருக்கணும்.

**படுசுட்டி:** ஆமா தம்பி. நானும் உங்களை மாதிரிதான் நினைக்கிறேன்.

**சுட்டி:** கலி முத்திப்போச்சு அப்படின்னு சொல்றாங்களே. சரியாத்தான் இருக்கு. அப்போ, அண்ணே, புறப்படறேன் இன்னொரு நாள் சாவகாசமா வர்றேன். வணக்கம்

**படுசுட்டி:** சரி தம்பி, நேரம் போனதே தெரியலே, வணக்கம் தம்பி சந்திக்கலாம். நல்லது

## உற்சாகமாக இருப்பது மகிமைக்குரியது

நான் சதா உற்சாகமாக இருந்தால் மற்றவர் முன்னேற்றத்திற்கும் உதவ முடியும்.

பிரச்சனைகள் வரும்போது உபயோகமற்ற வீணான எண்ணங்கள் உண்டாகலாம். இதைப் புரிந்து கொள்ளாவிடில் மனம் பாரமாகிச விடும். உற்சாகத்தைத் தடுத்து விடும். உற்சாகம் குறைந்து விட்டால் பிறர் முன்னேற்றத்தில் எப்படி உதவியாளன் ஆக முடியும்?

## இதற்கு என்ன செய்யலாம்?

எப்படிப்பட்டதொரு சூழ்நிலையை எதிர்கொள்ள வேண்டியிருந்தாலும் நாம் முயற்சியை விட்டுவிடக்கூடாது. உற்சாகமாகவே இருக்க வேண்டும் என்பதில் உறுதி வேண்டும். உற்சாகமிருந்தால் துணிவும் நிச்சயமாக இருக்கும். இதனால் என்னிடமுள்ள விசேஷத்திறமைகள் பிறர் முன்னேற்றத்திற்கு உதவியாக அமைந்து விடும் மேலும் என்னிடம் இதர விசேஷத்திறமைகள் இருப்பதை அறியக்கூடிய வாய்ப்பும் உண்டாகும். இதனை எல்லோருடைய நலனுக்கும் பயன் படுத்த முடியும்.



# தயாள குணம்

சிறுகதை பி.கு. ஞானசௌந்தரி, தஞ்சை

சின்னக்குடி என்ற கிராமத்தில் கந்தன் என்பவர் தன் மனைவி வள்ளியுடன் ஒரு சிறிய வீட்டில் வாழ்ந்து வந்தார். எளிமையான வாழ்வு நிறைவான தயாள குணமுடையவன் கந்தன். அவர் மனைவியோ எப்போதுமே தன் வாழ்வில் நிறைவில்லை, அதிகம் பணம் பொருள் வேண்டும் தான் சுகமாக இருக்க வேண்டும் என்று எண்ணுபவள். கந்தனுடைய தயாள குணம் அவளுக்கு பிடிக்காது. என்றாலும் கணவனுடன் வாழ்ந்துகொண்டிருந் தாள். அவர்கள் வசிக்கும் வீடு மிகப் பழைய சிறிய வீடு எப்பொழுது வேண்டுமானாலும் இடிந்து விழும் நிலையில் அந்த வீட்டில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். மழைக் காலம் வந்தது, ஒருநாள் இடியுடன் கூடிய மழை கொட்டுகின்றது. மாலை மறைந்து இரவும் வர ஆரம்பித்து விடுகிறது. இருவரும் ஏதோ இருந்த கொஞ்ச உணவை சாப்பிட்டு உறங்கு வதற்காக படுத்துவிடுகிறார்கள். தாழிட முடியாத கதவை சாத்திவிட்டு படுத்திருக்கின்றார்கள். நன்றாக மழை கொட்டிக் கொண்டிருக்கிறது. அப்போது யாரோ கதவை தட்டும் சப்தம் கேட்கிறது. உடனே கந்தன் எழுந்து கதவை திறக்கின்றான் மழையில் நனைந்தபடி நடுக்கத் துடன் நான் சிறிது நேரம் மழை விடும் வரையில் இங்கு இருந்துவிட்டு போகட்டுமா? என்று ஒருவர் கேட்கின்றார்; உடனே கந்தன் தாராளமாக இருங்கள் என்று கூறுகின்றான். அவன் மனைவிக்கோ கோபம் நமது தூக்கம் கெட்டுவிட்டது. மேலும் இருவர் தான் அந்த இடத்தில் படுக்க முடியும் எனவே எழுந்து அமர்ந்து கொண்டார்கள். மூவரும் அப்படி அமர்திருக்கும் போது சிறிது நேரத்தில் மீண்டும் கதவை தட்டும் ஓசை கேட்கின்றது. மனைவி கூறுகின்றாள் யாராவது மழைக்கு ஒதுங்க வருவார்கள் கதவை திறக்க வேண்டாம் இனி யாராவது வந்தால் நமக்கு உட்காரக் கூட இடமிருக்காது பாவம் யாரோ மழையில் நனைந்து கொண்டு கதவை தட்டு கின்றார்கள் உட்கார முடியவில்லை என்றால் என்ன? நாம் நின்றுகொண்டு இடம் கொடுக் கலாம் என்று கதவை திறக்கச் சொல்கின்றார் உடனே முதலில் வந்தவர் உங்கள் மனைவி சொல்வதுதான் சரி கதவை திறக்க வேண்டாம் எவ்வளவு நேரம் நாம் நின்றுக் கொண்டே யிருக்க முடியும் என்கின்றார். ஆனால் கந்தன் பரவாயில்லை நின்றுகொள்ளலாம் என்று கூறி கதவை திறந்துவிடுகின்றார். நான்காவது நபரும் உள்ளே வந்து விடுகின்றார். அனைவரும் நின்று கொண்டிருக்கின்றார்கள். நேரம் சென்று கொண்டேயிருக்கின்றது மழை கொட்டிக் கொண்டிருக்கின்றது. குளிர்வேறு வாட்டுகிறது. கந்தன் மனைவிக்கோ எரிச்சல் நம் கணவர் இப்படி செய்கின்றாரே என்று. மீண்டும் கதவு தட்டப்படும் ஓசை கேட்கிறது, வீட்டில் நிற்கக் கூட இடமில்லை இன்னும் யாரோ கதவைத் தட்டுகின்றார்களே என்று மனைவிக்கு கோபம் திறக்காதீர்கள் என்று கணவனிடம் சொல் கின்றாள். மற்றவர்களும் வேண்டாம் நமக்கே இடமில்லை இன்னொருவரை எப்படி உள்ளே வைப்பீர்கள் என்று கோபமாக கேட்கிறார்கள். கந்தன் அமைதியாக சென்று கதவை திறக் கின்றான். ஒரு பசு மாடு ஒன்று நிற்கின்றது. மற்றவர்கள் அனைவரும் சேர்ந்து விரட்டுங்கள் மாடு தானே நனைந்தால் என்ன? இங்கு நமக்கே இடமில்லை என்று கூறி மாட்டை விரட்டுகின்றார்கள். உடனே கந்தன் பாவம்

அந்த மாடு நனைய வேண்டாம் என்று அதனை உள்ளே கூப்பிட செல்கின்றார். பசு வெளியில் சென்றுவிடுகின்றது. இதனை கூப்பிட்டுக்கொண்டே கந்தன் வெளியில் வருகின்றான் சிறிது தூரம் வந்ததும் ஏதோ சப்தம்கேட்டு திரும்பி பார்கின்றான் அவனுடைய வீடு இடிந்து விழுந்து அதனுள் இருப்பவர் அனைவரும் இறந்துவிடுகின்றனர். அப்போது அந்த பசு சொல்கின்றது. கந்தா நீ கருணை உள்ளம் கொண்டவன் தன் கஷ்டத்தைப் பாராமல் அனைவருக்கும் உதவினாய். சுயநலம் கொண்டவர்கள் இறந்து விட்டார்கள். இவர்கள் வாழ்ந்தாலும் இறந்தாலும் ஒன்றுதான். உன்னுடைய நற்குணம், நற்செயல் உன்னை காப்பாற்றி விட்டது. என்று பசு வடிவில் வந்த கடவுள் வரமளித்து சென்றார்.

இந்த உலகில் மனிதனிடம் சுயநலம் நிறைந்து இருக்கின்றது. மனித ஆத்மாவின் இயற்கையான குணம் கருணை பிறர் மீது அன்புக் காட்டுவது தான். ஆனால் மனிதர்கள் தன் இயல்பான நிலை மறந்து தேக உணர்வினால் சுய நலத்துடன் வாழ்ந்துக் கொண்டிருக்கின்றார்கள். இதனால் துக்கம் கஷ்டம் மற்றும் அழிவின் பாதையில் சென்று கொண்டிருக்கின்றார்கள். தயாள குணம் உள்ளவர்களுக்கு இறைவனின் உதவி கிடைக்கும். இந்த கலியுக முடிவில் சங்கம யுகத்தில் இறைவன் ஞானத்தை கொடுத்து மீண்டும் தெய்வீக பண்புகளை நமக்கு தருகின்றார். ஞான யோக சக்தியின் மூலம் மீண்டும் நாம் நற்பண்புகளை கொண்டு வந்து நம் வாழ்வை பலனுள்ளதாக்குவோம்.


## FORM VI

**STATEMENT ABOUT OWNERSHIP AND OTHER PARTICULARS ABOUT SANGAMAYUGAM (TAMIL)**

| | | |
|---|---|---|
| 1. Place of Publication | : | Shanthi Dham, Plot No.:3702, Q-96, 3rd Avenue, Annanagar, Chennai-40 |
| 2. Periodicity of Publication | : | Bi-Monthly |
| 3. Printers Name | : | T. THIYAKESAN |
| Nationality | : | Indian |
| Address | : | 2/3, Weavers St., Thankesh Printers, Triplicane, Chennai-5 |
| 4. Publisher's Name | : | B.K. ANNAPOORNA |
| Nationality | : | Indian |
| Address | : | Shanti Dham, Plot No.3702, Q-96, 3rd Avenue, Annanagar, Chennai-40 Ph: 26266765, 26267441 |

I, B.K. Annapoorna hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

Date: 31.03.2015

**(SD)B.K. ANNAPOORNA,**
**Signature of Publisher.**



# சொர்க்க லோகம்

நாம் இப்போது வாழ்ந்து கொண்டிருக்கும் காலம் கலியுகம், இதனையடுத்து வரும் காலம் கிருதாயுகம். அதாவது சத்கர்மத்தின் அஸ்திவாரத்தில் அமைகின்ற காலம். ஆதலால் இது சத்யுகம் எனப்படுகிறது. காலச் சுழற்சியில் ஐயாயிரம் ஆண்டுகளுக்கு ஒரு முறை இவ்வாறு நிகழும் உன்னத மாற்றம் இது எனலாம். காலத் தன்மையின் தரம் இப்போது தமோபிரதானம். இது அடுத்து சதோபிர தானமாக மாறிவிடும். இந்த மாற்றம் உதாரணத் திற்கு, மலைக்கும், மடுவுக்குமுள்ள வித்தியாசம் எனலாம். ஆதலால் இந்த மிகப் பெரும் மாறுதலுக்கு உதவக்கூடிய ஒரு இடைப்பட்ட காலத்தின் அவசியம் இன்றியமையாத தாகின்றது. இது சங்கமயுகம் எனப்படுகிறது. இக்காலத்தில் தான் சத்யுகத்திற்கான மனிதன் தயாராகின்றான். அதாவது பிறவிப் பயணத்தில், தான் இழந்துவிட்ட இலக்ஷணங்களை மனிதன் மீண்டும் பெறுகின்றான் என்பதாகும். காலமானது பல்வேறு பெயர்களால் அழைக்கப் பட்டாலும் இக்காலங்களின் அனுபவங்கள் இம்மண்ணைச் சார்ந்த ஒன்றாகவே இருக் கின்றது. மனித மனம் பேரின்ப சுகத்தை அனுபவிக்கும் காலம் சொர்க்கம். மனிதன் நரக வேதனையை அனுபவிக்கும் அக்காலம் நரகம் என்பதாகும். புயலுக்குப் பின் அமைதி உண்டாகும். இந்த அனுபவத்தில் நமக்கு நம்பிக்கை உண்டு. இப்போது வாழ்க்கையில் புயல் வீசிக் கொண்டிருக்கிறது. இது இன்னும் சில காலம் அதிமாகக் கூடும். பிறகு புயல் ஓய்ந்து விடும். இதன் முடிவில் பேரின்பம் தவழும் அமைதி நிலவும். ஆதலால் இன்றைய கலியுகத்தைச் சற்றே மறந்து, சத்யுகம் எனும் பொற்கால சொர்க்க வாசலில் நுழைவோமாக !

பாரதம் தான் சொர்க்க பூமி. அப்போது இது அகண்ட பாரதமாக இருந்தது. உலகம் என்பது பாரதம் மட்டுமே. 2500 ஆண்டுகள் வரை இது முற்றிலும் கடல் நீரால் சூழப்பட்டிருக்கும். வெகுதூரத்தில் இங்குமங்கு மாக சில மணற்திட்டுகள் போல மண் பரப்பு காணப்படும். இப்படி கடல் பரப்பில் பாரத பூமி மட்டுமே இருந்திருக்கிறது. இதில் லட்சுமி-நாராயணருடைய சாம் ராஜ்யம் இருந்திருக் கிறது. அப்போது இங்கு வாழ்ந்து கொண்டிருந்த வர்கள் மிகச் சிலராக ஒன்பது லட்சம் என ஆரம்பமாகியிருக்கிறது. இவர்கள் அனைவரும் தெய்வீக லட்சணங்களையுடைய தேவதைகள். இவ்வாறு பாரதம் சுமார் 2500 ஆண்டுகாலம் சூரியவம்சம், சந்திர வம்சம் என்ற வம்சா வழியினர் வாழும் சொர்க்கமாக இருந்தது என்பது உண்மை வரலாறு. இது வரலாற்று ஆசிரியர்களால் அறியப்படாத ஒன்று.

இதற்குப் பின்னர் உலகம் எவ்வாறி ருந்தது, மனிதன் எவ்வாறிருந்தான் என்பது பற்றி வரலாற்று ஆசிரியர்கள் எழுதி வைத்த குறிப்புகள் நம்மிடம் உண்டு. அதாவது அகண்ட பாரதம் துண்டு, துண்டாகப் பிரிந்திருக்கிறது. மனிதனும் தனது பழைய லட்சணங்களை இழந்திருக்கிறான். இவர்கள் நாளடைவில் இங்கிருந்து தங்களுக்கு வேண்டியதை எடுத்துச் சென்று இங்கு மங்கு மாக வெவ்வேறு மண் பரப்பில் குடியேறியிருந் திருக்கின்றனர். கடல் நீரின் அளவும் குறைந் திருக்கிறது. இவ்வாறு அப்போது யாரெல்லாம் இங்கிருந்து எடுத்துக் கொண்டார்களோ, அவர்கள் எல்லோரும் திருப்பிக் கொடுத்து விட வேண்டிய நிலை ஏற்படும். பாரதம் செல்வச்

செழிப்பு மிக்க மகாதானியாக இருந்தமையால் யாருக்கு என்ன வேண்டுமோ, அதையெல்லாம் வழங்கிவிட்டது. இன்றைய நிலையில், நமக்கு வேண்டும் என்ற நிலையிருந்தாலும் எடுத்துச் சென்றதைத் திருப்பிக் கொடுத்து விடுங்கள் என்று கேட்க வேண்டிய அவசியம் இருக்காது. தாங்களாகவே கொடுத்துவிடுவார்கள்.

இங்கு இப்போது சில பொருட்கள் ஆஸ்திரேலியாவிலிருந்து வந்தது என்றும், ஜப்பானிலிருந்து வந்ததென்றும் கூறுகின்றார்கள். ஆனால் பாரதம் சொர்க்கமாக இருந்த போது இந்த தேசங்களெல்லாம் இருக்கவில்லை. நாடகப்படி சில பொருட்கள் வெளிநாடுகளிலிருந்து இப்போதும் வருகின்றன. ஆனால் அன்றைய பாரதத்தில் இல்லை என்ற சொல்லுக்கே இடமில்லை. அங்குள்ள ஒவ்வொரு பொருளும் கூட சதோபிரதானமாக இருக்கும் யாரிடமும் கேட்க வேண்டிய அவசியமே இருக்காது.

அப்போது அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற நாடுகள், பாரதவாசிகள் பிக்னிக் செல்லும் இடங்களாக, சுற்றுலா சென்று வரும் இடங்களாகத்தானிருக்கும். இப்போது இருப்பதைப் போன்ற விஸ்தீரணம் இருக்காது. இயற்கை சூழல் உள்ள தீவுத்திடல்களாக இருக்கும். அன்றைய பாரதவாசிகள் இங்கு பிக்னிக் செல்வதற்கு பயன்படுத்தினார்கள் இரண்டுபேர் நான்கு பேர் சென்று வரும் படியான விமானங்கள் இருக்கும். சிறு பிராயத்தினரும் இதனை பயன்படுத்த முடியும். பட்டன் பிரஸ் செய்தவுடன் ஒலியையும் மிஞ்சும் வேகத்தில் விமானம் பறந்து சென்றடைந்து விடும் தொலைபேசியில் தொடர்பு கொள்ள எவ்வளவு நேரம் பிடிக்குமோ, அதே நேரத்தில் விமானம் மூலம் சென்றடைந்து விட முடியும் ஆதலால் தொலை பேசிக்கு அவசியமில்லை. விமானம் ஒருவர் பயணம் செய்யக் கூடியதாகவும், விதவிதமாகவும் இருக்கும் அங்கு அரண்மனைகள் போன்ற மாளிகையில் விமானங்கள் ஒரு பக்கம் வரிசையாக நிறுத்தப்பட்டிருக்கும், விமானத்தை ஸ்டார்ட் செய்வது மிக எளிது. அணு சக்தி மூலம் இயங்கக் கூடியவை. ஆபத்து என்ற பேச்சுக்கே இடமில்லை.

அடுத்து சத்யுக சம்ஸ்காரம் என்பதைப் பற்றி சிந்திப்பதோ, அல்லது நினைவில் கொண்டு வர வேண்டிய அவசியமில்லை. அது இப்போது தானாகவே சுய வாழ்க்கையில் நடைமுறையில் வந்து கொண்டே இருக்கும். இந்த உலகில் இருக்கும் போதே சத்யுக காட்சிகள் தென்படும். வருங்காலத்தில் எந்த சொரூபத்தைத் தாரணை செய்யப் போகிறோமோ, அதுவும் அடிக்கடி கண் முன் வரும். ஆதலால் மிகவும் மகிழ்ச்சியாயிருக்கும். இன்றைய சங்கமயுகத்திலேயே சத்யுக அனுபவம் செய்து கொண்டேயிருப்போம்.

சத்யுக வாசிகள் தேவதைகள் ஆதலால் இவர்களிடம் எந்த ஒரு அபிலாஷையும் இருக்காது. ஏனெனில் சங்கமயுகத்திலேயே பரம தந்தை உங்களுடைய எல்லா அபிலாஷைகளையும் பூர்த்தி செய்து விடுவார். ஆதலால் சொர்க்கம் என்பது ஈஸ்வரிய பாக்கியத்தின் மாயாஜால நகரமாகும். இப்படிப் பட்ட சத்யுகத்தில் தேவதா பதவி அடைய வேண்டுமா? அப்படியானால், இதற்கு, இப்போது என்ன முயற்சி செய்ய வேண்டும்?

இப்போது பரம தந்தை பரமாத்மா பொழிகின்ற ஞான மழையின் காரணமாக, இந்த முட்காடானது பசுமையான பூஞ்சோலையாக மாறிவிடும். எல்லாம் பச்சைப் பசேலென்று பசுமையாக ஆகிவிடும் யார் இப்போது இந்த புது உலக ஸ்தாபனையில் உதவியாளராக இருக்கின்றார்களோ, இராஜயோகம் கற்றுக் கொள்கின்றார்களோ அவர்களுக்குத் தான் இராஜ்ய பாக்கியம் கிடைக்கும். ஏனெனில் இந்த சகஜ இராஜயோகத்தினால் அடையப் பெறும் பாக்கியம், வருங்காலத்தில் இராஜாவுக்

கெல்லாம் இராஜாவாக, மனிதனிலிருந்து தேவனாவதாகும்.

சிவ பாபா ஹெவன்லி காட் பாதர் என அழைக்கப்படுகின்றார். அவர் அருளுகின்ற ஞானத்தின் சில வார்த்தைகளைக் கேட்பவர்கள் கூட சொர்க்கத்தில் வந்து விடுவார்கள். இன்னும் அநேகர் வருவார்கள். முழு இராஜதானியும் ஸ்தாபனையாக வேண்டும். அங்கு எல்லா வகையினரும் வேண்டும். படிப்பின் ஆதாரத் தில் சிலர் இராஜாவாகவும், சிலர் செல்வச் செழிப்பு மிக்கவர்களாகவும் ஆவார்கள்.

யார் இந்த சங்கமயுகத்தில் சமயம், சங்கல்பம் மற்றும் சம்பத்து அனைத்தையும் வீணாக்காமல் பயனுள்ளதாக்கி வருமானத்தை சேமிக்கிறார்களோ, அவர்கள் இராஜ குடும்பத்தில் பிறக்கும் அதிகாரத்தை பிறவி பிறவிகளாக அடைவார்கள்.

யார் இப்போது தங்களுடைய வாழ்க்கையில், புதுமையைக் கொண்டு வருகிறார்களோ, தனது வாழ்க்கை என்னும் கட்டிடத்தை மிக அழகாகவும், நிறை யுள்ளதாகவும் செய்கிறார்களோ, அவர்களே புது உலகில் அழகும் சம்பூர்ணமுள்ள இராஜ்ய பாக்கியத்தை அடைவார்கள்.

யார், இப்போது இந்தப் பழைய உலகமுழுவதையும் தனது புத்தியிலிருந்து விலக்கி விட்டார்களோ, யார் தந்தையை சதா காலத்திற்கும் தன் துணையாக எற்றுக் கொண்டிருக்கிறார்களோ, அவர்களே புது உலகில் யமுனை நதிக்கரையில் அமைய விருக்கும் அரண்மனையில் ஸ்ரீகிருஷ்ணருடன் வாசம் செய்வார்கள். யாருக்கு இங்கே கற்பிப்பதிலும், படிப்பதிலும் விசேஷ பாகம் இருக்கிறதோ அவர்களே கிருஷ்ணருடன் சேர்ந்து படிக்கக் கூடிய பள்ளித் தோழனாக இருப்பார்கள். யார் சங்கமயுகத்தில் தந்தையின் சம்ஸ்காரத்தில் சமமாக ஆகிக் கொண்டிருக் கிறார்களோ, அவர்களே ஸ்ரீகிருஷ்ணருடன் ஆடிப்பாடி மகிழ்வார்கள். யார் இப்போது தூய்மையின் கௌரவ நிலையில் நிலைத்திருக் கின்றார்களோ, அவர்களே சதா இராஜ குடும்பத்தில் வருவார்கள். யாருடைய கண்கள் உலகாயத ஆகர்ஷணத்தால் வசீகரிக்கப் படாதோ, யார் சதா தெய்வீக குணங்களின் அலங்காரத்தில் இருப்பார்களோ, யார், இப்போது அதிகாரி நிலையில் இருப்பார்களோ, யார் மாயைக்கு ஒருபோதும் அடிமையாகாமல் இருக்கின்றார்களோ, அவர்களே அதிகார முடையவர்களாவார்கள்.

இங்கே யார் சம நிலையில் சம்மந்தத்திலி ருக்கிறார்களோ, அவர்கள் அங்கு சம்மந்தத் திலும், சமீபத்திலிருப்பார்கள். எவ்வளவு இங்கே சமீபத்தில் இருப்பதன் மூலமாக சதா உடன் இருக்கிறார்களோ, அவ்வளவு மூலவதனத் திலும் இப்படிப்பட்ட ஆத்மாக்கள் சமீபத்தில் இருப்பார்கள். மேலும் சொர்க்கத்திலும் கூட ஒவ்வொரு நாளும் நடக்கக் கூடிய எல்லாவித நடவடிக்கைகளிலும் சம்மந்தம் உடையவர்களாக உடனிருப்பார்கள். இங்கு எப்படி உன்னோடு இருப்பேன், உன்னோடு தான் பேசுவேன், உன்னோடுதான் விளையாடு வேன் என்ற நிலையில் இருக்கின்றார்களோ, அவர்கள் தான் காலை முதல் பூங்காவில் விளையாடுவதிலும், ஆடிப்பாடி மகிழ்வதிலும், பள்ளிக்குச் செல்வதிலும் கூடவே இருப்பார்கள். மேலும் இராஜ பரிபாலனை சமயத்திலும் கூடவே இருப்பார்கள். எப்படி பிரம்மா பாபா சுய இராஜ்ய அதிகாரியாக இருந்தாரோ, அவ்வாறே பிரம்மா பாபாவைப் பின்பற்றி நடப்பவர்களும் (சுய இராஜ்யம் எங்களது பிறப்புரிமை என்ற சங்கல்பம் உடையவர்கள்) இராஜ்ய பரிபாலனை செய்வதிலும் உடனிருப்பார்கள். இங்கு முதல் நம்பரில் தினந்தோறும் நேரம் தவறாமல் வகுப்பிற்கு வருபவர்கள், அங்கேயும் கூடவே படிப்பார்கள். ஏனெனில் பிரம்மா பாபா நம்பர் ஒன் காட்லி

ஸ்டூடண்ட் இங்கே யார் அதீந்திரிய சுகம் எனும் ஊஞ்சலில் ஆடிக் கொண்டிருக்கிறார்களோ அவர்கள் அங்கேயும் ஊஞ்சலில் கூடவே ஆடுபவர்களாக இருப்பார்கள். இங்கு யார் எல்லா பிராப்தி களையும் அடையப் பெற்ற குஷியில் ஆனந்தத் கூத்தாடுகிறார்களோ, அங்கே உடன் ஆடி மகிழ்வார்கள். ஆனால் முதல் நம்பரில் வரக்கூடிய லட்சுமி, நாராயணரின் விஸ்வ மகாராஜன் என்ற சிம்மாசனத்தில் அமர ஒவ்வொரு விசயத் திலும் பாபாவை முழுமையாகப் பின் பற்றி நடந்தவர்களாக இருக்க வேண்டும். ஒவ்வொரு விசயத்திலும் ஃபாலோ ஃபாதர் இந்த அடிப்படையில்தான் நம்பர் கிடைக்கும். முதல் நம்பர் லட்சுமி, நாராயணருக்கும், எட்டாவது நம்பர் லட்சுமி-நாராயணருக்கும் வித்தியாசம் இருக்குமல்லவா ! இந்த வித்தியாசம் இப்போது பின்பற்றி நடப்பதில் இருக்கும் வித்தியாசமாகும்.

இங்கே யார் வாரிசாகின்றார்களோ, அவர்கள் தான் சத்யுகத்தில் இராஜ குடும்பத்தில் வருவார்கள். தாய் தந்தையரின் சிம்மாசனம் தனக்குக் கிடைக்க வேண்டும் என்ற அளவுக்கு முயற்சியும் செய்திருக்க வேண்டும் இங்கு நீங்கள் வருவது சத்ய நாராயணருடைய கதை கேட்பதற்குத்தான். இதன் மூலம் நீங்கள் நரனிலிருந்து நாராயணனாகின்றீர்கள். நாராயணருடன், லட்சுமியும் இருப்பார். லட்சுமி ஆவதற்காக தனியான கதை ஒன்றுமில்லை. நாராயணருடன் லட்சுமியும் தயாராகி விடுவார். லட்சுமியும் நாராயணர் ஆவதுண்டு நாராயணரும் லட்சுமி ஆவதுண்டு.


இப்போது ஒவ்வொருவரும் தங்கள் நிலையை வெகு சீக்கிரமாகவே சரி செய்து வைத்துக் கொள்ள வேண்டும் ஏனெனில் பொன்மயமான, சுகமயமான உலகில் செல்வ தற்காக நாடகத்தின் திட்டப்படி எல்லோரும் தயாராக வேண்டுமல்லவா ! பிரஜைகளும் தயாராக வேண்டும். பிரஜைகளுக்குப் பிரஜை களும் தயாராக வேண்டும். ராஜா, ராணி தயாராகிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் ராயல் ஃபேமிலி, செல்வந்தர் ஃபேமிலி, இதன் பிறகு பிரஜைகள், தாச, தாசிகள் எவ்வளவு தயாராக வேண்டியுள்ளது! ஆதலால் உங்கள் முயற்சியை தீவிரப்படுத்துங்கள்.

சத்யுகத்தில் விஷ்வ மகாராஜன் என்ற பெயரில் 8 அதிகார பீடங்கள் ஆட்சி செலுத்துகின்றன ஆனால் முதல் மகாராஜன் காலத்தில் இருக்கக் கூடிய சுகம் மற்றும் 8வது விஷ்வ மகாராஜன் காலத்தில் இருக்கும் சுகத்திற்கும் வித்தியாசமுள்ளது. ஆதலால் முதலிலேயே வருவதற்கு முயற்சி செய்யுங்கள். ஒருவேளை உங்களுடைய வேகத்தைவிட, காலச்சுற்றின் வேகம் அதிகமானால் சத்யுகத்தில் வருவதற்குப் பதிலாக, திரேதாயுகத்தில் வரவேண்டியதாகி விடும். ஆதலால் நேரம் எவ்வளவு வேகமாக ஓடுகிறதோ அதற்கு இணையாக ஓட வேண்டும். நேரம் நகர்ந்து கொண்டேயிருக்கிறது. நேரம் யாருக்காகவும் காத்திருக்காது. மெதுவாகச் செல்லக்கூடிய நேரம் முடிந்து விட்டது. ஓடிப்பிடிக்க வேண்டிய நேரமும் முடிந்து விட்டது. ஆதலால் இந்த நேரம் தாவிச் செல்ல வேண்டிய நேரமாகும். எந்த விஷயத்திலாவது குறை இருக்கிறது என்று கருதினால் அதனை ஒரு விநாடியில் மாற்றிக் கொண்டு விட வேண்டும். இதற்குத்தான் ஹை ஜம்ப் என்று சொல்லப்படுகிறது. இதற்கு நமக்கு வேண்டியது நிச்சயமும், துணிச்சலும் தான்.

இன்னும் ரிசல்ட் அவுட் ஆகவில்லை. ஆதலால் வருங்காலத்தில் உயர்ந்த பதவி அடைய வேண்டும் என்ற லக்ஷியம் இருக்கட்டும். மியூஸிக்கல் சேர் விளையாட்டில், பாட்டின் ஒலி நின்றதும் யாருக்கு சீட் கிடைக்கிறது என்று தெரிந்து விடுகிறதல்லவா? இப்போது முதல் நம்பரைத்தவிர வேறு எந்த நம்பரும் நிச்சயிக்கப்படவில்லை. இரண்டு நிச்சயிக்கப்பட்டுவிட்டது. ஆறு மார்ஜின் உள்ளது. ஆனால் முதல் டிவிஷனில் அநேகர்

இருப்பார்கள். எவ்வளவு ராஜா-ராணிகள் சிம்மாசனத்தில் அமரக்கூடிய அதிகார முடையவர்களாக இருக்கிறார்களோ, அவ்வளவு இராஜ குடும்பத்தின் பதவிகள் இருக்கும். ஆதலால் முதல் டிவிஷனில் வரவேண்டும் என்ற லக்ஷியம் சதா இருக்க வேண்டும். இராஜ குடும்பத்தில் வருவதும் கூட லக்ஷிமி நாராயணரைப் போன்றது தான். ஆகையால் முயற்சி செய்யுங்கள்.

## குறுக்கு எழுத்து புதிர்



**இடமிருந்து வலம்**

1. நம் உண்மையான வீடு
3. பக்தியில் சிவனின் வாகனமாகக் கருதப் படுவது
4. வாசி தலைகீழாக வாசித்தால் கடவுள் பெயர்
7. கிரீடத்தை தாங்குவது
11. ஆரவல்லி மலைத் தொடரின் உயர்ந்த சிகரம் பாதி பெயர்
13. ஐந்து விகாரங்களில் ஒன்று **(ம்) (ல்)** என்ற எழுத்தில் முடியாது
15. சிவன் பார்வதிக்கு கூறியதாக சொல்லப் படுவது அமர.......
16. தேக அகங்காரத்தின் முதல் வார்த்தை
19. தூய்மையான பறவை

**வலமிருந்து இடம்:**

6. இந்திரியங்களை தன் வசப்படுத்துவதை இவ்வாறு கூறுவார்கள்
8. பக்தியில் கடவுள் மீது இருப்பது
9. பிரம்மா குமாரிகளின் தீர்த்த ஸ்தலம்
10. நாம் சீதைகள் என்றால், பாபா.........
18. அபுமலை அமைந்த மாநிலம்
21. பாபா முற்றுப்புள்ளி வைக்கச் சொன்னால், சிலர்..... போடுகிறார்கள் (ஆங்கில வார்த்தை)

**மேலிருந்து கீழ்**

1. பிறரை நினைப்பதை ஹிந்தியில் இவ்வாறு கூறுவார்கள்
2. பிறருக்கு மனதாரக் கொடுப்பது
3. 16 கலைகளில் ஒன்று
5. அடியின் (Step) வடமொழிச் சொல்
10. மம்மா இவ்வாறும் அழைக்கப்பட்டார். பாதி பெயர்
13. உலக நாடகம் ..... போல ஊர்ந்து செல்கிறது.
16. பாம்பிற்கு மற்றொரு பெயர்

**கீழிருந்து மேல்**

6. ஆத்மாவின் சூட்சும இந்திரியங்களுள் ஒன்று
11. ...............ப் பெண்களுக்கும் அவசியம் ஞானம் கொடுக்க வேண்டும்.
12. .........உலகம் இப்போது ஸ்தாபனை ஆகிறது.
14. மாயா இந்த ரூபத்திலும் வருகிறது. ஆங்கில வார்த்தை கலைந்துள்ளது
19. இறைவனிடம் வைக்கும் முதல் சம்மந்தம்
20. ஸ்வமான்-ல் மறைந்திருக்கும் விலங்கு
21. விஷ்ணுவின் மூன்றாவது அலங்காரம்
22. பிரம்மாகுமாரிகள் இயக்கத்தில் கற்பிப்பது....

**புதிர் விடை: பக்கம் - 30**



திருவண்ணாமலை: குழந்தைகளை சிறந்த மனிதர்களாக உருவாக்க தேவை அன்பா? கண்டிப்பா? என்ற கலந்தாய்வு நிகழ்ச்சியை பி.கு. உமா அவர்கள் நிகழ்த்துகிறார்.



திருவண்ணாமலை: கூட்டுறவுத் துறை மேலாளர்களுக்கு Self Management Leadership பயிற்சியளிக்கிறார் பி.கு. உமா. உடன் இணைப்பதிவாளர் திரு.வே.பெரியசாமி, துணைப்பதிவாளர் ஆர்.நந்தகுமார்





சென்னை: : காவாங்கரையில் தீப தியான நிகழ்ச்சி ஆரம்ப விழாவினை துவக்கி வைப்பவர்கள்: பி.கு. பாண்டி அபர்ணா, பி.கு. கீதா மற்றும் நகர பிரமுகர்கள்

தீப தியான விழாவில் கலந்து கொண்ட தாய்மார்கள்.




டொரன்டோ (கனடா): பஞ்சாபி வம்சாவழியினருக்கான சிறப்பு நிகழ்ச்சியில் பி.கு. இரஞ்சனி



டொரன்டோ (கனடா): குமாரிகளுக்காக நிகழ்ச்சியில் பங்கு கொண்டவர்களுடன் பி.கு. இரஞ்சனி



கடலூர்: சிவஜெயந்தியை முன்னிட்டு ஏற்பாடு செய்யப் பட்டிருந்த படவிளக்க கண்காட்சியில் ஆர்வமுடன் கேட்கும் பொது மக்கள்



சிவகங்கை: மாவட்ட ஆட்சியர் திரு. T. முனிசாமி அவர்களுக்கு இறை நினைவு பரிசினை வழங்குபவர் பி.கு. விமலா



சிவகங்கை: திரு E.M. சுதர்சன நாச்சியப்பன், M.P, அவர்களுக்கு இறை நினைவு பரிசினை வழங்குபவர்கள்: பி.கு. விமலா, பி.கு. வசந்தா, பி.கு. காயத்திரி




சிவகங்கை: 21ம் நூற்றாண்டு பள்ளியில் பி.கு விமலா அவர்கள் நினைவாற்றல் பற்றி உரையாடுகிறார் உடன் பி.கு செண்பகம்.



சென்னை: ArcelorMittal Dhamm Processing Private Limited அலுவர்களுக்கு இராஜயோக பயற்சி அளித்தபின் பி.கு. நீலிமா மற்றும் பயிற்சியில் கலந்து கொண்டோர்.



சென்னை: சிவஜெயந்தி விழாவினை முன்னிட்டு முகப்பேரில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த விழிப்புணர்ச்சி அமைதி பேரணி



சுங்குவார்சத்திரம்: சிவஜெயந்தி விழா நிகழ்ச்சியில் மேடையில் திரு. S. கேசவன், முன்னாள் முதல்வர், மகரிஷி ரெசிடென்சி ஸ்கூல், Dr. லதாபிள்ளை. Director, Rajivgandhi National Institute of Youth Development , அருள் தந்தை பிரான்சிஸ் போர்கியா, பி.கு. கலாவதி, பி.கு. பீனா மற்றும் திரு. ராமன் முன்னாள் கவுன்சிலர்



சென்னை: இரத்தன்பஜார் சார்பில் காவாங்கரையில் நடைபெற்ற சிவஜெயந்தி விழாவில் கலந்து கொண்ட பொதுமக்கள்.



கொடுங்கையூரில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த சோமநாத் தரிசனத்தை கண்டு களிக்கும் பக்தர்கள்.



சென்னை: அம்பத்தூரில் சிவஜெயந்தி விழாவில் கலந்து கொண்ட சகோதர சகோதரிகள்.



# கோபம் (சென்ற இதழ் தொடர்ச்சி)

### மற்றவரின் கோபத்தை மாற்றுதல்

தியானத்தில் ஒருவர் ஈடுபட்டிருக்கும் போது இறைவனிடம் தொடர்பு கொண்டு அவரிட மிருந்து ஆன்மீக அன்பு மற்றும் அமைதியை கிரகிக்க முடிகிறது. இயல்பாக நம்மிடம் உள்ள குணங்கள், ஆத்மா நான் தூய்மை நிலையில் இவ்வுலகில் எனது நடிப்பை நடித்துக் கொண்டிருக்கிறேன் என்பது ஆழ் மனதிலிருந்து வெளிப்படுகிறது. இதன் பலனாக பிற மனித ஆத்மா கருத்து வேறுபாட்டின் காரணமாக விரும்பத்தகாத முறையில் நடந்து கொண்டாலும் நான் அமைதியாக இருப்பதற்கான சக்தி பெருமளவில் கிடைக்கிறது. இழிவாகப் பேசும் போதோ அன்றி மனக்கிளர்ச்சியை தூண்டும் போதோ நிலை பிறழாமல் இருக்கக் கூடிய சக்தி உள்ளது. இந்த சக்தி வாழ்க்கையில் அதிக மதிப்பு வாய்ந்தது. மோசமான (சூடேற்றும் ) சூழ்நிலை களில் குளிர்ந்த (தணிவான) மனநிலையை வைத்துக் கொள்ள முடிகிறது. அத்துடன் மற்றவருடைய கோபத்தை நீக்க, தணிக்கவும் முடிகிறது.

கோபம் கொள்பவரின் முகத்தில் ஏற்படும் மாற்றங்களை கூர்ந்து பார்ப்பதற்கு பதிலாக அவருடைய உடலற்ற நட்சத்திரம் போன்ற ஆத்மாவை பார்க்கவும். ஆத்மா தான் இயல்பாக அமைதியாகவும் அன்பாகவும் நிஜ வடிவில் தூய்மையாக இருக்கக்கூடியது. இது சகித்துக் கொள்ளும், ஏற்றுக் கொள்ளும் சக்தியை அதிகரிக்கச் செய்கிறது. ஆத்மாக்கள் அனைத்துக்குமான பொதுவான நிரந்தர வசிப்பிடம் சாந்தி தாமம் அல்லது மூலவதனம், அங்கிருந்து தான் இவ்வுலக நாடக மேடைக்கு தத்தமது நடிப்பை நடிக்க வருகின்றன. மானிடர்களுக்கிடையே ஆன்மீக பந்தனம் உள்ளது. அனைவருக்கும் ஒரே ஒரு பரம்பிதா பரமாத்மாவோடு தொடர்பு உள்ளது. இராஜயோக தியானத்தால் அறிய முடிகிறது. இந்த ஞானத்தின் மூலம் மற்ற ஆத்மாவை நல்லெண்ணம் மற்றும் அன்பு கொண்டு நிர்வகிக்க வேண்டும். நல்லெண்ணம் என்பது கோபத்தை விட ஆழமான நிதர்சன உண்மை என்பதை புரிந்து கொள்ள வேண்டும். ஆத்ம உணர்வில் நேர்மறை பார்வை மூலம் தந்தையிடமிருந்து பெற்ற சக்திகளை மற்ற ஆத்மாவிற்கு பரப்புவதால் மாய மந்திரம் போல் வேலை செய்து அந்த ஆத்மாவில் பொதிந்துள்ள நற்குணங்களை தட்டி எழுப்பும். பிறகு நமது பொறுத்து கொள்ளும் சக்திக்கான பலனாக இருவருக்குமிடையே அமைதி நிலவும்.

### கோபத்தை அடக்கி ஆளுதல் - தவிர்த்தல்

தன்னை உணர்ந்து கொள்வதனால் ஒரு வினாடி எரிச்சலூட்டும் சம்பவம் அல்லது சூழ்நிலை காரணமாக எப்படி கோபம் ஆரம்ப மாகிறது என்பதை காண முடியும். அச்சம்ப வத்தையே மீண்டும் மனதில் எண்ணிப் பார்ப்பது மற்றும் அதை வேறு வகையில் மாற்றி எண்ணுவது என்பது நடப்பட்ட ஒரு செடிக்கு நீர் ஊற்றுவது போலாகும், மேலும் வளர்ந்து ஏமாற்றம் அடைந்து திருப்தியடைய வேண்டி திட்டம் தீட்டுவதால் மேலும் கோபம் வளர்ந்து விடும். அடுத்த படியாக மூர்க்கத்தனம் மேலோங்கும்.

கோபத்தை அடக்கிக் கொள்ளவோ அல்லது வெளிக்காட்டவோ கூடாது. வேறென்ன செய்வது? மாற்றம் செய்வதுதான்

வழி. ஆனால் அதற்கு கோபத்திற்கான, மனக்கிளர்ச்சி (எழுச்சி ) க்கான மூல காரணத்தை அறிய வேண்டும். இதை புரிந்து கொள்ளும் தன்மை, தான் யார் அதாவது ஓர் ஆத்மா என்பதை சிந்திக்க வேண்டும். கோபத்திற்கான அடிப்படை காரணத்தை அறியும் போது (1) அதிகரிப்பதா அல்லது (2) வளரச் செய்வதா - இவ்விரண்டில் ஒன்றை தேர்ந்தெடுக்கும் வாய்ப்பு உள்ளது. துரதிர்ஷ்டமாக ஒரு சிலர் கோபத்திற்கு தானே தான் காரணம் என ஏற்றுக் கொண்டாலும், கோபப் படுவதை கட்டுப்படுத்த இயலாமல் போகிறது. கோபத்திற்கான சாதகமான பல காரண காரியங்களைக் கூறி நியாயப்படுத்துகின்றன. போதைக்கு அடிமையானவர்களைப் போல கோபத்திற்கு அடிமையாகி விடுகின்றனர்.

கோபத்திற்கான மூல காரணத்தை அறிந்து கொள்ள தயாரா? அல்லது புதிது புதிதாக காரணங்களைக் கூறி நியாயப்படுத்த விரும்பு கிறீர்களா? மனக்கிளர்ச்சியிலிருந்து மீள இது உகந்த நேரமல்லவா?

கோபம் ஏற்படும்போது ஆழ்மனதை ஒரு வீடாக எண்ணி மனக்கண் முன் நிறுத்துங்கள். அவ்வீட்டில் ஒரு அமைதி அறையையும் அதனுள் காலியான இடம் இருப்பதையும் பாருங்கள். பிறகு படிப்படியாக அமைதியை பிரதிபலிக்கும் வண்ணங்களாலும், பொருட் களாலும் அலங்கரியுங்கள். அறைக்குள் சூரியக்கதிர்கள் பரவி பிரகாசம் ஏற்படுவதைக் கவனியுங்கள். நீங்கள் ஓரிடத்தில் அமர்ந்து அமைதி அதிர்வலைகளைப் பரப்புங்கள். இப்போது உங்களுக்கான அமைதியான ஓர் இடம் (அறை) தயார். எப்பொழுதெல்லாம் கோபம், எரிச்சல், ஏமாற்றம் முதலானவை ஏற்படுகிறதோ அப்பொழுது அவ்வறைக்குள் சென்று உங்களிடமுள்ள மனவலிமை, புத்தியை பயன்படுத்துங்கள். ஒரு நொடியில் அமைதி உங்களுக்காகவே காத்துக் கொண்டிருக்கும். இந்நிலை எப்போதும் மனதில் பசுமையாக நிறைந்திருக்க உள்ளுக்குள் ஏற்பட்ட அனுபவத்தை எழுதவும்.

## கோபத்திற்குப் பதிலாக அமைதியைத் தேர்ந்தெடுத்தல்

அமைதியைத் தேர்ந்தெடுக்கும் முடிவு (உரிமை) நம் ஒவ்வொருவரின் கையில் உள்ளது. எப்பொழுது வேண்டுமானாலும் உரிமையை பயன்படுத்தலாம். ஒரு சிலரோ தனக்கென பிடித்தமான முறையைத் தேர்ந்தெடுக்கின்றனர். பழைய பழக்கங்களில் ஊறிப் போனதால் ஏதாவது ஒரு சாதாரண விசயத்திற்குக் கூட கோபப்படுவதை தொடர்கின்றனர். கோபம் இல்லாமல் காரியங்களைச் செய்வது, செய்ய வைப்பது முடியாது என்று எண்ணுகிறார்கள். நாம் வேலை செய்கின்ற இடத்தில், நம்மை சுற்றிலும் உள்ளவர்கள், நண்பர்கள் நமக்கு சம்மந்தமில்லாத பலரை காய்கறி மார்க்கெட், வழியில் அல்லது திரை அரங்குகளில் அம்மாதிரி எடுத்ததற்கெல்லாம் கோபம் கொள்வோரை சந்திக்கிறோம். கோபத்திற்கான மூலக்காரணத்தை அறியாமலேயே தான் கோபப்படுவதை நியாயப்படுத்தி அப்பழக்கத்தையே ஒரு சுபாவ மாக நடந்து கொள்ளக் கூடியவர்கள் பலர் உள்ளனர். அவர்களது மனக் கிளர்ச்சி அந்த அளவு ஆழமானதாகவும், அப்பழக்கத்திற்கு அடிமையாகி விட்டதாலும், கோபம் என்பது எதிர்விளைவுகளை உண்டாக்கும், அது ஒருவகை பலவீனம் அல்லது தன்னையே துன்புறுத்திக் கொள்வதாகும் என்ற கருத்தைக் கூறினால் எள்ளி நகைப்பார்கள். எனவே கோபத் திற்குப் பதிலாக அமைதியை தேர்ந்தெடுத் தோமானால் சக்திசாலியான நிலைப்பாட்டை அடையலாம். இதன் பலனாக துக்கத்திலிருந்து விடுபட முடியும். இதை அனுபவம் செய்ய வேண்டுமெனில் நம்முன்னேயே புதைந் திருக்கும் இயற்கையான அமைதியை தியானத் தின் மூலம் கண்டறிந்து தினசரி வாழ்க்கையில்

நடைமுறையில் கொண்டு வர வேண்டியது அவசியம்.

### கோபத்திற்கான மூலம் மற்றும் விளைவு

மூலக்காரணங்களில் முதலாவது ஒரு இடத்திற்குப் போய் சேர முடியாமல் கால தாமதமாவது, எண்ணிய காரியம் முடிவு பெறாத போது, போக்குவரத்து நெரிசலில் சிக்கும் போது ஏற்படும் நிலை கொள்ளாமை இதனால் குறித்த நேரத்தில் செல்ல வேண்டிய இடத்தை சென்றடைய இயலாமை, நமக்கு நன்கு அறிந்த ஒரு நபர் ஏதோ ஒரு காரணத்தால் நம்மை சந்திப்பதை தவிர்த்தல் இம்மாதிரியான பல காரணங்களினால் மனதில் எரிச்சல் ஏற்படுகிறது. மேலும் சில சம்பவங்கள் விதைக்கு நீர் ஊற்றி வளர்ப்பது போல் ஏமாற்றமாக வளர்கிறது. ஏமாற்றம் மேலும் வளராமல் தடுத்து நிறுத்த உறுதியான திட்டமிடாவிடில் அதுவே இயல்பான இயற்கையான பழக்கமாகி விடும். நம்மை நாமே இது நம்முள் இரத்தத்தோடு கலந்த பிறவி குணமென எண்ணி சமாதானம் செய்து கொள்கிறோம்.

ஒவ்வொரு முறையும் நாம் கோபம் கொள்ளும் போது பலவித வேண்டாத இரசாயன திரவங்கள் உற்பத்தியாகி அதற்கு அடிமையாகி (போதை போன்று ) நடைமுறை படுத்த தகுந்த தருணத்தை தேர்வு செய்கிறோம். தினமும் வியாதிக்கான மாத்திரை, மருந்து உட்கொள்வது போல. நாளடைவில் நம்மை அல்ல நமது உடலைக் கொன்றே விடும் அதற்கு இடம் கொடுக்காதீர்கள். யாரோடும், எக்காரணத் திற்காகவும் கோபம் கொள்ள அவசியமே இல்லை. மாறாக கோபம் நம்மால் தான் உற்பத்தியாகிறது, விடுபட ஒரு மாற்று வழியை சேமிக்க வேண்டும். அறிந்து கொள்ளுங்கள், ஏற்றுக் கொள்ளுங்கள், சுதந்திரமடைந்து மகிழ்வடையுங்கள். **ஓம் சாந்தி ........... நான் ஒரு அமைதியான ஆத்மா !**

## வாக்குறுதியை நிறைவேற்றுவது மகிமைக்குரியது

நான் எடுத்துக் கொண்ட உறுதிமொழியை நிறைவேற்றும்போது, ஒவ்வொரு அடியிலும் முன்னேற்றத்தை அனுபவம் செய்கிறேன்.

பொதுவாக, நமக்கு நாமே உறுதிமொழி எடுத்துக் கொள்கிறோம். சிலசமயம் மற்றவருக்கும் வாக்குறுதி அளிக்கிறோம். இவ்வாறு எடுத்துக் கொண்ட அல்லது கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றுவதற்கு நேர்மையுடன் முயற்சியும் செய்கிறோம். அப்படியிருந்தும் சில சமயங்களில் வாக்குறுதியை நிறைவேற்ற முடியாமல் போய் விடுவதுண்டு.

## இதற்கு என்ன செய்யலாம்

உதாரணமாக நான் இனிமேல் இப்படி நடந்துகொள்ள வேண்டும் என்று தனக்குத்தானே உறுதிமொழி எடுத்துக் கொள்கிறோம். இதை நிறைவேற்றுவதற்காக உடனேயே இதற்கான முயற்சிகளை மேற்கொள்வது அவசியம். அப்போது தான் நான் நினைத்ததை சாதிக்க முடியும். இவ்வாறு சாதிப்பதன் மூலம் தனக்கு என்ன பயன் என்பதன் முக்கியத்துவத்தைப்பற்றிப் புரிந்து கொள்வதும் அவசியம். மேலும் நான் எடுத்துக்கொண்ட உறுதிமொழியை நிறைவேற்றும் வரையிலும் தன்னை நினைவு படுத்திக் கொண்டேயிருப்பது அவசியமாகிறது.



# விழிப்புணர்வு பெறும் நேரமிது

*(பி.கு. சுந்தரராஜன், சென்னை)*

தற்காலத்தில் செல்வத்திற்கு அதிகமாக மதிப்பும் மரியாதையும் அளிக்கப்படுகிறது. செல்வம் என்பதன் பொதுவான அர்த்தம் வாங்கும் சக்தி எனலாம். உதாரணமாக ஒருவரிடம் ஐந்து ரூபாய் இருந்தால் அவர் அதற்குத் தகுந்த பொருட்களைத் தான் வாங்க முடியும். ஒருவேளை நூறு ரூபாய் இருந்தால் நூறு ரூபாய் வரை வாங்கலாம். ஆனால் காலப் போக்கில் சூழ்நிலைகள் மாறுகின்றன. செல்வத்திற்குண்டான இயற்கையான மதிப்பு இருப்பதில்லை. ஒருவர் தர்மம் செய்வதற்காக சிறு சேமிப்பாக சேமித்து வைத்திருந்து யாத்திரை சென்றார். வழியில் பிச்சைக்காரர்களுக்கு சில்லரையை தானமாகக் கொடுத்துக் கொண்டே சென்றார். ஒரு பிச்சைக்காரருக்கு நான்கு அணா (25 நயா பைசா) கொடுத்தார். பிச்சைக்காரரோ தட்டிலிருந்து அந்த நாலணாவை எடுத்து அவரிடமே திரும்பக் கொடுத்து விட்டு கூறினார், இதற்கு ஒன்றுமே கிடைக்காது. எதையும் வாங்க முடியாது என்பது உங்களுக்குத் தெரியாததல்ல. தயவு செய்து இதைத் திரும்பப் பெற்றுக் கொள்ளுங்கள் என்றார். இதன் மூலமாக வாங்கும் சக்தி குறைகிறது என்பது தெளிவாகிறது. (தற்சமயம் நாலணா அதாவது 25 நயா பைசாவை அரசாங்கமே செல்லாது என அறிவித்து விட்டது. 50 பைசாவிற்கும் மதிப்பில்லை)

அதிகாரம் இருக்கும் போது சிலரிடம் அபிமானம் வந்து விடுகிறது. மகாபாரத கதையில் யுதிஷ்ட்ரருடைய ரதம் சத்தியத்தின் ஆதாரத்தில் நிலத்திற்கு மேல் ஒன்றே கால் அடி உயரத்தில் எழும்பி நின்றதாக கதையில் கூறப்பட்டுள்ளது. ஆனால் செல்வந்தரோ அகங்காரத்தால் பூமிக்கு மேல் (மிதந்து கொண்டு) இருப்பதாக எண்ணுகின்றனர். அர்த்த சாஸ்திரவாதிகள் தனவான் என்றால் சாமான்ய மக்களைவிட செல்வம் வைத்திருப்பதால் தனவான் என்று விளக்கம் தருகின்றனர். அதாவது இரண்டு கோடி இருந்தால் ஒரு கோடி வைத்திருப்பவரைவிட தனவான், இவரை விட நான்கு கோடி வைத்திருப்பவரெனில் முன்னவரை விட இவர் தனவான்.

ஒருசில செல்வந்தர்களிடம் நற்குணங் களைப் பார்க்க முடிவதில்லை. இது கசப்பான உண்மை. ஆகவே சாஸ்திரங்களில் கதை ரூபத்தில் இராவணனை அளவற்ற தனத்திற்கு அதிபதியாக கூறப்பட்டுள்ளது. தனவான் எப்போதும் தன்னிடமுள்ள செல்வத்தைப் பாதுகாப்பதிலேயே கவனம் செலுத்துகிறார்.

உறவுகளைப்பற்றி கவலைப் படுவதேயில்லை. சுயநலமே பிரதானமாக இருக்கின்றது. உதாரணமாக கம்சன் தன் சகோதரி தேவகியின் குழந்தைகளைக் கொன்றான். முகலாய அரசன் தன்மகனைக் கொன்று டில்லி சிம்மாசனத்தைக் கைப்பற்றினான். அதேமுறையில் முகலாய சாம்ராஜ்ய ஔரங்கசீப் சகோதரர்களை வஞ்சித்து சிம்மாசனத்தில் அமர்ந்ததாக வரலாறு சொல்கிறது.

இராஜ்ய அதிகாரம் மற்றும் செல்வத்தினால் கிடைக்கும் அதிகாரம் இரண்டும் சில சமயம் ஒன்றுக் கொன்று உதவுவதாக இருக்கலாம். ஆகவே தான் அதிகாரத்தில் உள்ள சிலர் செல்வத்தை சேமிக்கின்றனர். தற்காலத்தில் அதிக செல்வம் படைத்தோர் அதன் அதிகாரத்

தின் மூலம் தீய காரியங்களைச் செய்வதற்கு அஞ்சுவதில்லை. சத்யுகத்தில் அங்கு வாழும் ஒவ்வொருவரிடமும் தேவைக்கு அதிகமாகவே சொத்து பல மடங்கு இருக்கும் என அறிகிறோம். இதன் காரணமாக அங்கு தீய காரியங்கள் எதுவும் நடைபெறுவதில்லை. அங்கு பொருளாதாரப் பிரச்சினைகள் இருப்பதில்லை. ஆதலால் சிவபாபா நம்மை அவரது அவதாரத்தின் போது சங்கமயுகத்தில் சிறந்த குணவான்களாக உருவாக்கி தன்னிடமுள்ள சொத்துக்கு வாரிசுகளாக்குகிறார். செல்வ செழிப்பு மிகுந்திருந்தாலும் தீய குணங்களைப் பற்றிய உணர்வே இல்லாதவர்களாக இருக்கின்றனர். இயல்பான ஆன்மீக அன்பைத் தவிர வேறில்லை. அனைவருமே தெய்வீக குணம் நிறைந்தவர்கள், அறிவாளிகள், களங்கமற்றவர்கள், மேலும் கபடமற்றவர்களாகவும் இருப்பதன் காரணமாக எல்லோருமே எப்போதும் திருப்தியுடன், மலர்ந்த முகத்துடன் இருக்கின்றார்கள். கவலை என்றால் என்னவென்றே அறியாத நிலையில் ஆனந்த பரவசத்தில் இருக்கின்றார்கள்.

இன்றைய வாழ்க்கை அனுபவத்தோடு ஒருவேளை ஒப்பிட வேண்டுமென்று நினைப்போமேயானால், மலைக்கும் மடுவுக்குமுள்ள வித்தியாசத்தை அறியலாம். நம்பவே முடியாத அப்படியொரு விந்தையான மனித வாழ்க்கை. எனினும் இது தான் கடவுளின் முதலாம் படைப்பு என்பதால், உண்மையினை ஒதுக்கிவிட முடிவதில்லை. கலியுக வாழ்க்கை என்பது முற்றிலும் வேறுபட்ட ஒன்றாக இருப்பதை அனுபவம் செய்கிறோம். ஆனால் சத்யுக மனிதர்களின் காரியங்கள் அனைத்தும் சுகர்மமாகவே இருந்துள்ளது. துவாபரயுகத்திலிருந்து தான் மனிதர்களின் நடவடிக்கைகள் மாறியிருக்கின்றன. இந்த மாற்றம் கீழ்நோக்கு முகமாகவே தொடர்ந்து எல்லையைத் தொட்டுவிட்டோம். அத்தியாவசிய மான உணவு, உடை, உறைவிடம் என்பதை மறந்து பேராசையின் பிடியில் அகப்பட்டுக் கொண்டுவிட்டோம் என்று தான் சொல்ல முடியும்.

பரமபிதா பரமாத்மா சாதாரண உடலில் பிரவேசமாகி இவ்வுலகை உய்விக்கவே தன்னுடைய சொந்தக் குழந்தைகளைத் தெரிந்தெடுத்து இராஜயோக கல்வியைக் கற்பிக்க வந்துள்ளார். சிவராத்திரியை கொண்டாடுகின்ற இத்தருணத்தில் தந்தை நமக்காக பிழிந்தெடுத்து கீதா சாரத்தை அமிர்தமாகத் தருகின்றார். ஆதி சநாதன தேவி தேவதா தர்மத்தை வெற்றி முழக்கத்தோடு தந்தைக்கு வலது கரமாக இருந்து ஸ்தாபனை செய்வதில் நாம் பங்கேற்பது நமது பாக்கியம்.

ஆத்ம ஞானம் மற்றும் யோக பலத்தால் இறுதி இலட்சியத்தை அடைவதே குறிக்கோளாக இருக்க வேண்டும். ஆத்மாக்களாகிய நம் அனைவரின் ஆன்மிக தந்தை, சுகமளிக்கும் வள்ளல், அவரது பிரியமான ஆன்மீக குழந்தை களாக்கி நமக்கு சுகமளிப்பதற்காக, உலகளாவிய மறுமலர்ச்சிக்கான கைங்கர்யத்தை இப்போது இக்கல்பத்தில் மீண்டும் செய்துக் கொண்டிருக் கின்றார். மனிதன் புருஷோத்தமனாக மாறும் தகுதி பெறும் பொன்னான நேரம் இதுவாக இருக்கின்றது. ஆகையால் இந்த அற்புத நிகழ்வை அனுபவம் அடைந்து கொண்டிருக் கின்ற நாம் எத்தனை பாக்கியசாலிகள்!!

அமைதியை அனுபவம் செய்ய அனைவருக்கும் அதிகாரமுண்டு.
ஆனால் அதற்காக முயல்பவனே அனுபவம் செய்கிறான்

ஒருவன் தன் சாமர்த்தியத்தைத் தவறாகப் பயன்படுத்தினால்,
அதுவே, அவனது முன்னேற்றத்திற்குத் தடையாக வரும்



# வெற்றிகரமான மாணவ வாழ்க்கை

**பி.கு. செண்பகராஜ், மதுரை**

மாணவ வாழ்க்கைபோன்று ஒரு உன்னதமான காலகட்டம் யாருக்கும் திரும்ப அமையாது என்பது நாம் அறிந்த விசயமாகும். அந்த பருவத்தில் பொறுப்புகள் குறைக்கப்பட்டு, படிப்புக்கு அதிக கவனம் கொடுக்கும் வண்ணம் அமைந்துள்ளது. இதை நமது ஆசிரியப் பெருமக்கள் மூலம் பலமுறை கேட்டிருப்பீர்கள், இங்கு தான் மிகக் கவனம் தேவை. இதற்கு பொறுப்பற்ற நிலையும், கவலையில்லாமலும் இருப்பது என்று அர்த்த மல்ல. அந்த பொன்னான காலத்தைப் பயன் படுத்திக் கொள்ளவேண்டும் என்று அர்த்தம்.

மனித வாழ்க்கையில் ஒருவருக்கு அனைத்து சூழ்நிலையிலும், முன்முனைப் பிலும், அந்த அந்த காலகட்டத்திற்கு அவசியமான எதுவும் அவ்வளவு சீக்கிரம் கிடைத்துவிடுவதில்லை. மனிதனாக பிறந்து விட்டால் போராட்டத்தை தோளில் சுமந்து கொண்டுதான் வாழ்ந்தாக வேண்டும் என்பது புரிந்து கொள்ளும் வரையிலான நியதி. போராட்டம் என்று ஒன்று இல்லை யென்றாலும் சுவாரசியம் என்பது இருக்காதே! பளிங்குத் தரையில் பாம்பு செல்லக் கஷ்டப்படும், பள்ளமேடு கொண்ட தரையில் மிக வேகமாகச் சீறிப்பாயும். போராட்டமே வாழ்க்கை என்பது இல்லை, ஆனால் போராடி வெற்றியை அடைவதே ஒரு சுவாரசியம் தான். **துணிந்தவனுக்கு தூக்கு மேடையும் பஞ்சுமெத்தை** என்பது பழமொழி. **பயந்தவனுக்கு பார்ப்ப தெல்லாம் பாதாளம், பயத்தை வென்றவனுக்கு பாழ்குழியும் பல்லாக்கு**, என்பார்கள்.

உதாரணமாக மாணவ மாணவியர் களுக்கு ஞாபகமறதி, மனஒருமைப்பாடு என்ற போராட்டம் இருக்கத்தான் செய்யும். அதன் மீது தான் அவர்கள் வெற்றி அடைய வேண்டும், அதுவே அவர்களின் முயற்சி. இப்படியாக எந்த துறையை எடுத்துக் கொண்டாலும் ஒரு விதமான போராட்டம் (ரிஸ்க்) அங்கு இருக்கத்தான் செய்யும். இது தான் வாழ்க்கைத் தத்துவம். ரிஸ்க் எடுப்பது எனக்கு ரஸ்க்கு சாப்பிடுவது மாதிரி என்ற காமெடி வசனத்தை கேட்டிருப்பீர்கள், அது காமெடி அல்ல ஒருவரின் வாழ்வின் உண்மை அனுபவம். எதிலும் துணிச்சலாக இருக்கின்ற வர்களுக்கு வெற்றி என்பது நிச்சயம் கிடைக்கும். இவ்வுலகில் அனைவரும் சாதனை யாளர்கள் தான், ஏனெனில் இன்றைய சூழ்நிலை மிக மோசமாக உள்ளது. காலையில் இருந்து இரவு வரை வாழ்க்கை என்பது தினம் தினம் ஒரு போராட்டமாக உள்ளது என்பதை நாம் அறிவோம்.

படிப்பை மறக்கும் உங்களுக்கு, பார்க்கும் திரைப்படம் மறப்பதில்லை ஏன்? காரணம் என்ன? பாடத்தை படமாகப் பார்த்தால் மறக்காது அல்லவா! எதையும் படிக்க, ஆர்வம் ஒன்று இருந்தால் மட்டும் போதுமானது அல்ல, விதியுடன் படிக்க வேண்டும். பொதுவாக, பாடத்தை படிக்காதீர்கள், படித்து (காட்சியாக) பாருங்கள். படமாக பார்த்து படித்தால் அது எப்படி மறக்கும், அது பதியாமலா, நினைவுக்கு வராமலா போகும்! படிப்பு என்றாலே அதனுடன் மறதியும் ஒட்டிப் பிறந்ததாயிற்றே! ஒரு வேளை அந்த படிப்பு படமெடுக்கும் பாடமாக இருந்தாலும் அதிலும் சிலர் தோற்று போவது உண்டு. பாடப்படிப்பு மட்டுமல்லாது

எந்தப்படிப்பும் வாழ்க்கையில் சிலவற்றை கற்றுத்தரவல்லது, கற்கவேண்டியது எல்லாம் எளிதில் யாருக்கும் கிடைத்துவிடாது. படிப்பு என்பது முன்னேற்றத்திற்கு மூலதனமாகும்.

பல வருடங்களுக்கு பிறகு பார்க்கும் திரைப்படத்தின் காட்சிகள் புதிதாக இருப்பதை நாம் உணர்கின்றோம். அதுவும் கூட மறக்கத் தான் செய்யும். அனாவசியமானதை மறக் கின்றோம். எதை அவசியமானதாகக் கருது கின்றோமோ அதை நாம் மறப்பதில்லை. நம் அம்மா அப்பாவை மறக்கின்றோமா? இல்லை. எனவே மறதி என்பது ஒரு வியாதியோ அல்லது வம்சாவளியோ அல்ல. அது ஒரு மனப்பிரம்மை. மனதில் தேவையானவற்றிக்கு இடம் இல்லை, அதற்கே மறதி என்று கூறுகின்றோம். படிப்பும் அப்படித்தான், அதனால் படிக்கும் போது, முதலில் இந்த படிப்பு மிகமுக்கியம் என்பதை மனதில் கொள்ளுங்கள். அப்பொழுது வேறு எந்த எண்ணங்களுக்கும் இடம் கொடுக்காதீர்கள். உங்கள் மனம் ஒரு சலனமில்லாத சிலேட்டாக இருந்தால் அந்த பாடம் எளிதாக எழுதப்படும், பதிக்கப்படும். மனம் பக்குவமாக இருந்தால் எந்த நேரத்தில் எந்த பதிவை ஏற்படுத்த வேண்டுமோ அதை ஏற்படுத்தலாம். எதை அழிக்கவேண்டுமோ அதை அழிக்கவும் செய்யலாம். சிறிய காரியத்தை பெரிய காரியமாக நினைத்து கஷ்டப்பட்டே பழகியிருந்தால் என்ன செய்வது! கஷ்டப்பட்டு நாலு காசு சம்பாதிச்சு பாரு, அப்பொழுது தான் உனக்கு தெரியும் என்று அப்பா அம்மா சொல்வதை (திரைப்படங்களில்) கேட்டு கஷ்டமே வாழ்க்கை யாகிவிட்டது போலும்! யாரும் இவ்வுலகில் கஷ்டப்படுவதற்கென்று வரவில்லை. வாழ வந்ததோமே ஒழிய மாள வரவில்லை. அன்று குருகுலத்தில் கடினமான கல்வி முறை யிருந்தது, கண்டிப்பும் இருந்தது. கல்விக்கு மாணவன் மரியாதை தரவேண்டும் என்ற ஒரு கொள்கையை மையமாக கொண்டு உருவாக் கப்படுகின்றது. அதற்காக கண்டிப்புகளும் கூட உருவாக்க வேண்டியதாய் உள்ளது.

வாழ்க்கைப் போராட்டத்தில் வெற்றி பெறுவது ஒன்றும் குதிரைக் கொம்பான விசயமில்லை. அதற்கு ஒரு எளிய சூத்திரம் உள்ளது. அதாவது **எல்லாவற்றிலும் ஒரு படி அதிகமாக யோசிக்க வேண்டும்** அவ்வளவு தான். ஒரு படி குறைவாக யோசித்தாலும் கூட அது நம்மை அச்சுறுத்தும், உதாரணமாக ஞாபக மறதியை வெல்லவேண்டுமா? பெரிய விசய மில்லை, அதற்காக எந்த மருந்து மாத்திரையும் அவசிமில்லை, எந்த பயிற்சியும் அவசிய மில்லை, நீங்களே டீச்சராகிவிடுங்கள். மறதியை வெல்ல ஒரு படி இப்படி அதிகம் யோசித்து பார்த்தால், கற்பவரைக் காட்டிலும் கற்றுத் தருபவருக்கு மறதி இருக்காது. அதாவது ஒரு படி அதிகமாக கற்றுக்கொள்ளுங்கள். உங்களுக்கு நீங்கள் படிப்பதைக் காட்டிலும் உங்களைப்போல் கஷ்டப்படும் பலருக்கு பயிற்றுவிக்கும் பயிற்சியாளராக ஆகிவிட்டால் இந்தப் பிரச்சனைப் போராட்டத்தை எளிதில் வென்றுவிடலாம் அல்லவா! இதற்கு எதற்கு மருந்து-மாத்திரை ! மாத்திரையை சாப்பிட்டாகி விட்டது, இனி மறதி என்பது என்னைவிட்டு போய்விடும் என்ற எண்ணம் தான் உங்கள் மறதியை போக்கியிருக்குமே தவிர மருந்தில் ஒரு மந்திரமும் அல்ல, மந்திரமாக இல்லா மலும் அல்ல. அதாவது அந்த எண்ணத்தை உருவாக்க ஒரு மாத்திரை அவசியம் தேவை என்று சொல்லலாம். எனக்கெல்லாம் கடவுளே வந்தாலும் இந்த மறதியைப் போக்கமுடியாது என்று நினைத்தால் நல்ல மாத்திரை சாப்பிட்டும் பலன் இருக்காது. இவ்விதமான எளிய வழியை கையாண்டால் எந்த பக்க விளைவுகளும் இருக்காது, கைமேல் உடனே பலனும் இருக்கும்.

வாழ்க்கையில் எதை வேண்டு மானாலும் இலட்சியமாக கொள்ளுங்கள். அந்த

இலட்சியமே வாழ்க்கை என்றும் மட்டும் நினைக்காதீர்கள். சிலர் எடுத்த ஒரு இலட்சியத்தை முடித்தவுடன் சோம்பேறி யாகவும், சிலர் அடையமுடியமால் போய் விட்டதெனில் வாழ்க்கையே முடிந்துவிட்டது என்றும் நினைத்து முயலாமல் இருந்துவிடு கின்றனர். இலட்சியம், வாழ்க்கையில் முன்னேற வகை செய்யும் ஒரு படிக்கல் அவ்வளவு தான். இப்படி பல இலட்சியங்களை படிகளாக மாற்றி முன்னேறவேண்டும். ஏதாவது எட்டாத பழத்திற்கு கொட்டாவி விட்டேன் என்ற கதை போன்று, ஒரு இலட்சியத்தை அடையும் முயற்சியிலேயே வாழ்க்கையை கழித்துவிடக்கூடாது. பிறகு இலட்சியத்தின் பலனை எப்போது அனுபவிப்பது? எந்த இலட்சியமும் இடைக் கால இலக்காக இருந்தால் மிகவும் நல்லது, படிப்பு என்பது குழந்தைப்பருவத்திலிருந்து அருமையான இளைஞர் பருவம் வரை உங்களை கட்டுக்கோப்போடு வளர்க்க உதவுவது. ஆனால் அது ஒன்றும் மட்டும் வாழ்க்கையில்லை.

ஆனால் எடுத்த எந்த இலட்சியத் தையும் அடைவது என்பது தான் வெற்றி கரமான வாழ்க்கை. அதற்கு பல வழிமுறைகள் உள்ளன. முதலில் 1) ஒரு இலட்சியத்தின் மீது உங்கள் இலக்கை நிலை நிறுத்துங்கள். 2) இதிலிருந்து வேறு எந்த பக்கமும் உங்கள் மனம் திசைதிரும்பாது பார்த்துக்கொள்ளுங்கள் (Stand where you are). 3) திரும்பத்திரும்ப அந்த இலட்சியத்தை மனதில் அசை போடுங்கள் (Reproduce, Repeat). 4) அது எனக்கு கிடைக்கும் என்று எப்பொழுதும் நம்புங்கள் (Faith). 5) இலட்சியம் நிறைவேறி விட்டதாகவே தினமும் பாருங்கள் (visualization). 6) யாருடன் பேசிப் பழகினாலும், நீங்கள் கொண்ட இலட்சியத்தைப் பற்றி வெளிப்படையாக பேசாமல், அதை அடைந்த ஒருவராக உங்களை அவர்களுக்கு காட்டுங்கள், அதாவது மற்றவர்களுக்கு இவன் அடைந்துவிட்டான் என்று தோன்றவேண்டும். அது வெளிப்பகட்டாகவும் இருக்கக்கூடாது. ஆக்கபூர்வமானதாகவும் இருக்கவேண்டும். ஏனெனில் எதை நீங்கள் உலகத்திற்கு காட்டு கின்றீர்களோ அதை உலகம் உங்களுக்கு கொண்டு வந்து தரும். உங்கள் ஒருவரின் எண்ணத்திற்கே அதிக சக்தியுள்ளது, அதிலும் மற்றவர்களின் எண்ணங்களையும் உங்களின் இலட்சியத்தை நோக்கி வளைத்துப்போட்டு விட்டால் அதைவிட எளிதான விசயம் வேறு எதுவுமில்லை. அது உங்களை வந்து தானாக சேரும். 7) ஒரு பொழுதும் பொறாமை கொள்ளாதீர்கள். அந்த வெறுப்பான உள்ளுணர்வு, உங்களுக்கே தெரியாமல், இவ்வளவு காலம் நீங்கள் உழைத்த உழைப்பை தின்றுவிடும். திறமையிருக்கும் பொழுது பொறுமை காத்தருளுங்கள், பொறாமை எதற்கு. திறமை அனைவரிடமும் இருந்தாலும் உங்களுக்கு கிடைப்பது உங்களுக்கே, வெற்றிக் கனி உங்களுக்கே என்று உணருங்கள்.

மாணவ வாழ்க்கையில் முன்னேற ஒழுக்கம் மிகவும் அவசியம் என்று கேட்டிருப் பீர்கள், ஒழுக்கம் என்றால் பெரியவிசயம் ஒன்றுமில்லை. ஓசியாக ஒரு மார்க்கைக்கூட, உங்கள் வகுப்பு ஆசிரியரே கொடுத்தாலும் நீங்கள் அதை வாங்கக்கூடாது. ஒரு மார்க்கில் ஆரம்பிக்கும் பழக்கம் இன்று உலகை சீரழித்துக் கொண்டிருக்கும் லஞ்சம் வரை செல்லும். தியாகம் செய்து பழகுங்கள். அதாவது உங்களுக்கு போக மீதம் எது அதிகமிருந் தாலும் அதைப் பலருக்குப் பயனுள்ளதாக்க முயலுங்கள். தியாகத்தின் பலன் தெவிட்டாத தேனாமிர்தம் தெரியுமா? தியாகம் செய்த வருக்கும் பலனைக் கொடுக்க பகவானே கீழிறங்கி வருவது புரியுமா?

உங்கள் வாழ்க்கையில் நீங்கள் நினைத்து அடைந்தவை அனைத்திற்கும் ஆதாரம்

உங்களின் நேர்மறையான உள்ளுணர்வே (50 விழுக்காட்டிற்கு மேல்) என்பதை நீங்களே சோதித்துப் பார்க்கலாம். அதில் சிறிது குறைந்தாலும், அதாவது எதிர்மறையான எண்ணங்கள் வந்திருந்தாலும் உங்களுக்கு நிச்சயம் கிடைத்திருக்காது. கிடைக்குமா அல்லது கிடைக்காதா என்ற சந்தேகம் வந்தாலும் வீணே. கிடைக்குமோ இல்லையோ, நாம் ஏன் எதிர்மறையான எண்ணங்களை எழுப்பி, கிடைப்பதை வீணடிக்கவேண்டும். வெற்றி அடைந்தால் தான் சரி என்று யார் கூறியது? வெற்றிப் பாதையில் பயின்ற பாடங்களே பெரிய வெற்றி யாயிற்றே. வெற்றி முழுமையாகக் கிடைத்து விட்டாலும் கூட முயற்சி நின்றுவிடுகின்றது. அடைந்த வெற்றி கால மாற்றத்தில் தோல்வியாகலாம், தோல்வி வெற்றியாகலாம். பிறகு எது வெற்றி? எனவே வெற்றிப் ,பாதையில் கிடைக்கும் பாடமே பயனுள்ளது.

இந்த சிட்டி நல்ல சிட்டி, அந்த சிட்டி சரியில்லை, இந்த பள்ளியில் படித்தால் நல்ல மார்க்கெடுத்து பாஸ் ஆகலாம், அங்கே படிச்சா நேரத்தை நல்ல பாஸ் செய்யலாம், இப்படி நினைத்துக்கொண்டு எத்தனையோ பேர் தனது நேரத்தை பாஸ் செய்து கொண்டிருக்கின்றார்கள். வரும் ஒவ்வொரு நிகழ்ச்சியையும் நிகழ்வுகளையும் மட்டும் பார்க்காதீர்கள், இதற்கு பின் எத்தனையோ ரகசியங்கள் புதைந்துள்ளன. நான் இவரின் ரசிகன், அவரின் ரசிகன் என்று போட்டி போட்டுக்கொண்டு தங்களின் உண்மையான திறமைகளை ரசிக்க மறந்துவிடுகின்றனர். பிறகு வாழ்க்கை எப்படி திறமை நிறைந்ததாக ஆகும்? தன்வாழ்க்கை எப்படி மற்றவர் ரசிக்கும் சுவாரசியமானதாக ஆகும்? எதைக்கண்டும் ஆச்சரியமோ, ஆனந்தமோ கொள்வதற்கும் முன் சற்று யோசியுங்கள். அனைத்தும் மாறி மாறித்தானே வருகின்றது. உங்கள் முன் வருவது (லைவ்) அனைத்தையும் ஏற்றுக்கொள்ளுங்கள். அதை அப்படியே பாருங்கள். அந்த நிகழ்வின் தாக்கத்திலிருந்து உங்களை பாதுகாப்பாக வைத்துக் கொண்டால் மட்டுமே தப்பித்தீர்கள். எதுவும் தலைபோகின்ற விசயமில்லை. லைவ்வாக வாழுங்கள்.

## இவர்கள் கற்பிப்பது என்ன?

**கடிகாரம்:** நேரத்தை பயனுள்ளதாக்குங்கள்!

**கடல்:** பரந்த மனம் உடையவர் ஆகுங்கள்!

**எறும்பு:** சதா சுறுசுறுப்பாக சேவை செய்து கொண்டேயிருங்கள் !

**மரம்:** மற்றவர்களுக்கு உதவி செய்யுங்கள்!

**பூமி:** பொறுமைசாலியாக இருங்கள்!

**சூரியன்:** வாழ்வாதாரமாய் விளங்குங்கள்!

**ரோஜா:** முட்களிடையிலும் மணம் பரப்புங்கள்!

**தீபம்:** மற்றவர்களுக்கு வழி காட்டுங்கள்!

**நாய்:** நன்றியுள்ளவர்களாக இருங்கள்!

**குயில்:** இனிமையாகப் பேசுங்கள்!

**காகம்:** ஒற்றுமையாய் வாழுங்கள்!

புதிர் விடைகள்

**(இடமிருந்து வலம்)**

| | | |
|---|---|---|
| 1. பரந்தாமம் | 3. நந்தி | 4. சிவா |
| 7. தலை | 11. அபு | 13. பேராசை |
| 15. கதை | 16. நான் | 19. அன்னம் |

**(வலமிருந்து இடம்)**

| | | |
|---|---|---|
| 6. புலனடக்கம் | 8. பயம் | 9. மதுபன் |
| 10. ராதை | 18. ராஜஸ்தான் | 21. கமா |

**(மேலிருந்து கீழ்)**

| | | |
|---|---|---|
| 1. பரசிந்தன் | 2. தானம் | 3. நடனம் |
| 5. கதம் | 10. ராம் | 13. பேன் |
| 16. நாகம் | | |

**(கீழிருந்து மேல்)**

| | | |
|---|---|---|
| 6. புத்தி | 11. அபலை | 12. புது |
| 14. ராயல் | 19. அப்பா | 20. மான் |
| 21. கதா | 22. இராஜயோகம் | |




# சங்கம யுகத்தின் அதிசயத்தின் அதிசயம் ஸ்ரீ ஸ்ரீ சிவபாபா

பி.கு கலியபெருமாள் லால்குடி - திருச்சி

சங்கமயுகத்தில் பரமாத்மா குப்தமாக வந்திருந்து ஞானத்தை அளிப்பது அதிசயம்

பரமாத்மா ஆத்மாக்களுக்காக ஞானம் சொல்ல வருவது அதிசயம்

முரளியில் கேள்வி கேட்டு பதில் அளித்து ஆசிரியராகி வருவதும் அதிசயம்

முரளியின் முடிவில் சத்குருவாகி வரம் அளிக்கும் வள்ளலாகி வரதானங்கள் அளிப்பது அதிசயம்

பரமாத்மாவும் குப்தமானவர் ஆத்மாக்களும் குப்தமானது ஆஸ்தியும் குப்தமானது அதிசயம் ஆத்மாவில் 84 பிறவிகளின் சம்ஸ்காரங்கள் பதிவாகியுள்ளது என்பதும் அதிசயம்

மனித ஆத்மா மனிதனாகத்தான் பிறவி எடுக்கிறது என்பதும் அறிந்திராத அதிசயம்

பாபாவின் நினைவின் மூலம் மட்டுமே பாவங்கள் அழியும் என்பதும் அதிசயம் !

ஒவ்வொரு அடியிலும் பாபாவின் நினைவு மூலம் கோடானு கோடி கோடி வருமானம் கிடைக்கப் பெறுவதும் அதிசயம் !

சம்பூர்ண தூய்மையின் மூலம் உலக இராஜ்யம் பெறுவதும் அதிசயம்

முரளி மூலம் 2500 ஆண்டுகள் சொர்க்க பதவியை அடைவது அதிசயம்

பரமாத்மா மடி கிடைத்ததும் இங்குமங்குமாக அலைந்து திரிவதிலிருந்து விடுபட்டதும் அதிசயம் உலகினருக்கு பரமாத்மா கடவுள். அவர் எனக்கு தந்தையாக இருப்பதும் அதிசயம்.

பரமாத்மா ஒருவரிடமே அனைத்து சம்மந்தங்களையும் கொண்டிருப்பது அதிசயம் மாதாக்களின் தலை மீது ஞான கலசத்தை வைத்து அவர்களை உயர்த்துவது அதிசயம்

சங்கமயுக விதியின் மூலம் மாதாக்களுக்கு முதலிடம் அளித்து சொர்க்கத்தில் ஸ்ரீ லட்சுமி, நாராயணன், ஸ்ரீ சீதா ராமன் என உயர்வளிப்பதும் அதிசயம்.

ஒன்றை கொடுத்து பல கோடி மடங்கு ஆஸ்தி பெறுவது சங்கமயுகத்தின் அதிசயம் !

முட்களை மலராக்குவது சங்கமயுகத்தில் பாபா செய்யும் அதிசயம்.

சரீர நிர்வாகத்திற்கான ஆஸ்தியினை சிறிதும் ஆத்மாவிற்கான ஆஸ்தியினை அதிக அளவில் சங்கமயுகத்தில் சேமிப்பது அதிசயம்

ஞான சூரியன், ஞான சந்திரன் மறைந்திருந்து ஆன்மீக நட்சத்திரங்களை பிரகாசிக்க செய்யும் அதிசயம்.

சரீரத்திற்கான மருத்துவர்களோ பலர் உள்ளனர். ஆத்மாவிற்கான சர்ஜன் பரமாத்மா ஒருவரே என்பது அதிசயம்

பூஜ்ய (புள்ளி சொரூபமாக) சிவ பாபா மூவுலக எஜமானன், படைப்பாளர் என்பதும் அதிசயம் அனைத்து ஆஸ்தியினையும் குழந்தைகளுக்கு கொடுத்து தான் சொர்க்கத்திற்கு வராததும் அதிசயம்.



## குழந்தை:

உள்ளத்தை பறித்த இறைவா!
எனது உறக்கத்தையும் ஏன் பறித்தாயோ?
எப்பொழுது தங்களை நேசிக்க தொடங்கினேனோ
அன்று முதல் எனது உறக்கம் பறிபோயிற்று
களைப்பின் காரணமாக சற்று கண்களை மூடினேன்,
கனவிலும் உங்களது நினைவு என்னை வாட்டி எடுப்பது ஏனோ?
உறக்கத்திலும் ஓயாது உன் நினைவை பெற்றிட
நான் என்ன தவம் செய்தேனோ?
இவ்வுலகில் பணம் படைத்தோர், பதவி படைத்தோர்,
பட்டங்கள் பல பெற்றிருப்போர் இருக்க
இவர்கள் அனைவரையும் விடுத்து சாதாரணமான
என்மீது தங்களின் அன்பு மழையை பொழிவதற்கான
காரணம் தான் என்னவோ?
இவர்களிடம் காண முடியாத சிறப்பை
அப்படியென்ன என்னிடம் கண்டு விட்டீர்கள்?

## சிவதந்தை:

குழந்தாய்! இவ்வுலகில் பணம் படைத்தோர் இருக்கலாம், பதவி பெற்றோர் இருக்கலாம்,
பட்டங்கள் பல சூடியவர்களும் இருக்கலாம் ஆனால்
**என்னுடைய தந்தை (மேரா பாபா)** என்று உள்ளப்பூர்வமாய், உரிமையோடும்
அதிகாரத்தோடும் ஏற்றுக் கொண்டது நீயே அன்றோ!
இதுவே உன்னிடம் நான் கண்ட முதல் சிறப்பு!
உதட்டளவில் இறைவனின் நாமத்தை உச்சரிப்பவர்கள் இருக்கலாம்,
ஆனால் என்னுடைய தந்தை (மேரா பாபா) என்ற உனது உள்ளத்தின்
இசையில் மயங்கியே நான் உன் பால் ஈர்க்கப்பட்டேன்.


## குழந்தை:

ஆஹா என்னே எனது பாக்கியம்! தந்தையே
தாங்கள் என் பால் ஈர்க்கப்பட்டதன் இரகசியத்தை இன்று உணர்ந்தேன்
இனி என்னுடைய தந்தை என்னுடைய தந்தை (மேரா பாபா, மேரா பாபா)
என்ற எனது உள்ளத்தின் இசையை ஓயாது ஒலித்து
ஆஹா குழந்தாய், ஆஹா குழந்தாய் (வாஹ் பச்சே வாஹ்)
என்ற தங்களின் இதயத்தின் இசையை ரசித்துக் கொண்டே வாழ்ந்திடுவேன்


ஆசிரியரும் பிரசுரிப்பவரும் பி.கு. அண்ணபூர்ணா, பிரஜாபிதா பிரம்மாகுமாரிகள் ஈஸ்வரிய விஷ்வ வித்யாலயம், சாந்திதாமம், பிளாட் எண்: 3702, Q-96, 3வது அவின்யு, அண்ணாநகர், சென்னை-40 அச்சிட்டோர் தா. தியாகேசன், தங்கேஷ் பிரிண்டர்ஸ், சென்னை-5
R.No.49463/87



சென்னை: நுங்கம்பாக்கம் சார்பில் வீதி வீதியாக இறைசெய்தி அளிக்கும் சேவையில் உலாவரும் ஊர்தி.



சென்னை: நுங்கம்பாக்கம்: ஊர்தி சேவையை துவக்கிவைக்கும் திரு. கலைப்புலி S. தாணு, திரு. ஜாகுவார் தங்கம், Dr. K.S. லக்ஷ்மி, தாளாளர் மீனாட்சி கல்லூரி மற்றும் நகர பிரமுகர்களுடன் பி.கு. கலாவதிஜி, பி.கு. பீனாஜி




மதுரை: சாந்தாதீதியின் 9வது ஆண்டு நினைவஞ்சலியில் தீதி பி.கு. ருக்மணி (கல்கத்தா) கலந்து கொண்டு சிரத்தாஞ்சலி செலுத்து கின்றார்கள் உடன் பி.கு. மீனாட்சி, பி.கு. உமா மற்றும் பி.கு. சகோதரர்கள்.



மதுரை: சாந்தாதீதியின் சிரத்தாஞ்சலி நிகழ்ச்சியில் கலந்து கொண்ட பிரம்மா குமாரி சகோதர சகோதரிகள்




மதுரை: மேடையில் பி.கு. தீதி ருக்மணி, பி.கு. மீனாட்சி, பி.கு. உமா, பி.கு. ஜெயகுமார், பி.கு. பலமுரளி




மும்பை: மகாராஷ்டிரா ஆளுநர் திரு. வித்யாசாகர் ராவ் அவர்கள் 7 Billion Acts of Goodness சங்கல்ப பத்திரத்தில் கையொப்பமிடு கின்றார். உடன் பி.கு. உஷா மற்றம் பி.கு. தீபக்




சென்னை: இந்து ஆன்மீக சேவை கண்காட்சியில் பிரம்மா குமாரிகள் புத்தக அரங்கு



சென்னை: சிவஜெயந்தி விழாவினை முன்னிட்டு முகப்பேரில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த விழிப்புணர்ச்சி அமைதி பேரணியில் ஆர்வத்துடன் விளக்கம் கேட்கும் வெளிநாட்டினர்.



சென்னை: சாந்தி தாமில் நடைபெற்ற சிவஜெயந்தி விழாவில் கலந்து கொண்ட மூத்த சகோதரிகள்




சென்னை: சாந்தி தாமில் நடைபெற்ற சிவஜெயந்தி விழாவில் பிரம்மா குமாரி சகோதர சகோதரிகள்







சென்னை: அயன்புரத்தில் அண்ணாமலையார் தரிசன காட்சியினை துவக்கி வைப்பவர்கள்: திரு. N.D. முருகானந்தம், விஷ்வ ஹிந்து பரிக்ஷத், Dr.C. மோகன் ரெட்டி, திரு. ரவிந்திரநாதன், திரு. G. வெங்கடேசன், திரு. S. மூர்த்தி, திருமதி இந்திரலஷ்மி, திருமதி இந்திரா பி.கு. பீனா



சென்னை: சுங்குவார்சத்திரம்: சிவஜெயந்தி விழா நிகழ்ச்சியில் சிவபாபாவின் கொடியேற்றுபவர்கள்: அருள் தந்தை பிரான்சிஸ், பி.கு. கலாவதி, பி.கு. பீனா மற்றும் சகோ. ஜூலியாஸ்



சென்னை: சிவஜெயந்தி விழாவினை முன்னிட்டு பல இடங்களில் இறை செய்தியை மக்களுக்கு அளிக்க விசேஷ ஏற்பாடு செய்யப்பட்டது



சென்னை: கொடுங்கையூரில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த சோமநாத் தரிசன நிகழ்ச்சியில் கலந்துகொண்ட பிரமுகர்கள்: திரு. சௌந்தரராஜன், MLA திரு. குருமூர்த்தி (குரு கேஸ் ஏஜென்சி) பி.கு. மணிமாதா, பி.கு. தேவி, பி.கு. சுந்தரேசன்



சென்னை: அம்பத்தூரில் முக்திஸ்வரன் தரிசன காட்சியினை துவக்கி வைப்பவர்கள்: பி.கு. இரஞ்சனி, பி.கு. உமா மற்றும் கவுன்சிலர் திருமதி ஹரிபிரியா.